ஜூன் 14 - ஜூலை 14 2012-3
இது ஒரு மாத இதழ்
விலை ரூபா 100/=

# தின மகுடி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தின மகுடி

## வரவேற்கிறோம்

நம்நாட்டுப் படைப்புகள் தரமானவையாக இருந்தால் நம்மவர்கள் ஆதரவுதருவார்கள் என்பதை எடுத்தியம்பும் வகையில் தினமகுடி இரண்டாவது பதிப்புக்கு நீங்கள் வழங்கிய ஆதரவு எம்மை மகிழ்ச்சியில் ஆழ்த்துகின்றது. வாசகர்கள் தொடர்ந்தும் தமது கருத்துகளை நம்-முடன் பகிர்ந்து வருவது எமது முயற்சிக்கு ஊக்கமளிக்கிறது.

கடந்த இதழ்பற்றிய இவ்வாறான கருத்தோட்டங்கள் எமது நிறை, குறைகளை சீர்தூக்கிப் பார்ப்பதற்கு உந்து சக்தியாக இருக்கின்றன.

விமர்சனம் என்பது ஒரு படைப்புக்கு இன்றியமையாதது என்பதையும் அவை ஆரோக்கியமானதாக அமைவது பிரதானம் என்பதையும் நாம் உணர்கிறோம். இத்தகைய உந்து சக்தியை தினக்குரல் வாரஇதழ் எமக்கு வழங்கி உற்சாகமுட்டியதை இவ்வேளை நன்றியுடன் நினைவு கூருகின்றோம்.

இதேவேளை, வர்த்தகப் பெருமக்கள் எமது இதழின் வளர்ச்சிக்காக தொடர்ந்து ஆதரவு வழங்க முன்வந்திருப்பது நம்பிக்கையை ஏற்படுத்துகின்றது

வெளிவந்த இரு இதழ்களுக்கு விளம்பர அனுசரணை வழங்கியவர்களுக்கு எமது இதயபூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இவ்வாறான உதவி, ஒத்துழைப்பை நல்கிய எமது வர்த்தகப் பெருமக்கள் தினமகுடி வாசர்களுக்காக எதிர்காலத்தில் பல்வேறு பரிசுத்திட்டங்களையும் வழங்க முன்வந்துள்ளார்கள் என்பதையும் இவ்வேளையில் தெரிவித்துக் கொள்ளவிரும்புகிறோம்.

இலங்கை தமிழ் இலக்கியப் பரப்பில் தினமகுடி சிறந்த தடத்தைப் பதிக்க வாசகர்களாகிய உங்கள் ஆதரவு பல்கிப் பெருக வேண்டும் என்பதை வேண்டுகோளாக இவ்வேளையில் முன் வைக்கிறோம்

ஆதரவு தாரீர்! புதுவழி சமைப்போம்!


**ஆசிரிய பீடம் தினமகுடி**
**இல.238 கடற்கரை வீதி**
**கொழும்பு – 11**
**தொலைபேசி : 011 3137921**
**தொலைநகல் : 011 2334633**
email : thinamakudis@gmail.com




## பெரிய துறவி!

கடவுளை நம்பாத நாத்திக மனப்பான்மை படைத்த ஒரு செல்வந்தர் ஒரு தடவை ராமகிருஷ்ண பரமஹம்சருடன் உரையாடிக் கொண்டிருந்தார்.அப்போது அவர், சுவாமி, தாங்கள் கடவுளுக்காகத் தங்கள் வாழ்க்கையைத் துறந்துவிட்டதாகக் கேள்விப்பட்டேன் என்றார்.

பரமஹம்சர் புன்னகை தவழும் முகத்துடன், நான் ஒரு துறவியாக இருக்கலாம். ஆனால் என்னை விட நீங்கள்தான் பெரிய துறவி என்றார்.

செல்வந்தருக்கு தூக்கிவாரிப் போட்டது.

உங்களைவிட நான் பெரிய துறவியா? எப்படி? என்று திகைப்புடன் கேட்டார்.

ஐயா, நானோ கடவுளுக்காக என் வாழ்க்கையைத் துறந்தேன். நீரோ சுகபோக வாழ்க்கைக்காக கடவுளையே துறந்துவிட்டீர். ஆகவே என்னைவிட நீர்தான் பெரிய துறவி என்றார் பரமஹம்சர்.

செல்வந்தர் வெட்கத்துடன் தலைகுனிந்து கொண்டார்.

இலங்கையில் வாஸ்த்துவத்தில் தேசிய விருது பெற்றவரும். எண்ணியல், பெயரியல் ஜோதிட நிபுணருமான மருதபத்மராஜனிடம் உங்களது பெயர்மாற்றுதல் எண்களின் நன்மை தீமை. வீடு (வாஸ்த்து முறைப்படி) கட்டும் போது கருத்தில் கொள்ள வேண்டிய விடையங்கள் சம்பந்தமான சந்தேகங்களுக்கு தீர்வு காண கேள்விகளை கேட்கலாம். தினமகுடி ஊடாக இச்சந்தர்ப்பத்தை வழங்குவதி மகிழ்ச்சியடைகிறோம்.

உங்கள் கேள்விகளை அனுப்ப வேண்டிய முகவரி

**தின மகுடி**
**கடற்கரை வீதி**
**கொழும்பு–11**



சித்த ஆயுர் வேத மருத்துவரும் சமாதான நீதிவான், சூரியன் வானொலியின் பகுதி நேர அறிவிப்பாளருமான வைத்தியர் நவரத்தினம் மணிவண்ணனிடம் சித்த ஆயுர் வேதத்தின் மூலம் பெறக்கூடிய நன்மைகள் மேலதிக விளக்கத்தினை பெற்றுக்கொள்ள முடியும். உங்கள் கேள்விகளை எழுதி அனுப்புங்கள். அனுப்பவேண்டிய முகவரி.

**சித்த மருத்துவம்**
**தின மகுடி**
**கடற்கரை வீதி**
**கொழும்பு–11**










**16** வயதினிலே, கிழக்குசீமை, மண்வாசனை, முதல் மரியாதை, என்ற வரிசையில் பாரதிராஜாவின் புதிய படமான அன்னகொடியும் கொடிவீரனும் பரபரப்பை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அன்மையில் இப்படத்திற்கான ஆரம்ப விழா சென்னையில் மிக விமரசையாக இடம்பெற்றது.

இங்கு ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த பாரதிராஜா கூறியதாவது நான்கு ஆண்டுகளுக்குப் பின்னர் மீண்டும் ஒரு படத்தை ஆரம்பித்திருக்கின்றேன் எனது சொந்த ஊரான தேனி மாவட்டத்தின் அல்லிநகர் கிராமத்தில் இடம்பெற்ற நிஜக்கதை இப்போது படமாகிறது. 1950 ஆண்டுகளின் பின்னனியில் நடந்த நிஜக்கதை இது. தமிழகத்தில் வாழ்ந்த தமிழனின் தனித்துவத்தை பாறை சாற்றும் என்பதையும் சொல்லிகொள்வதில் மகிழ்கிறேன்.

நான் எத்தனையோ நடிக நடிகைகளை திரையுலகுக்கு அறிமுகம் செய்திருக்கின்றேன் இப்படத்தின் சிறப்பான அம்சம் எனது சொந்த மண்ணின் மைந்தன் லக்க்ஷ்மனனை இப்படத்தில் அறிமுகப்படுத்துகிறேன். நடிப்பில் முத்திரை பதித்துவரும் இனியா, எனது அறிமுக நாயகி ராஜாவின் மகள் கார்த்திகா ஆகியோரும் நடிக்கின்றனர். பல புதுமையை சுமந்து வரும் இப்படம் நிச்சயம் உங்களின் மனங்களில் இடம் பிடிக்கும் என தெரிவித்தார்.

தினமகுடிக்காக தமிழகத்திலிருந்து யுவன்





Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ஒரு புதிய உதயம்



கடந்த 5 ஆண்டுகளாக நவோதயம் இளைஞர் அமைப்பு என்ற பெயரில் செயற்பட்டு வந்த அமைப்பு தற்போது நவோதயம் மக்கள் முன்னணியாக உதயம் கண்டுள்ளது. வறுமை கோட்டுக்குக் கீழ்வாழும் மக்களின் மேம்பாட்டைக் கருத்தில் கொண்டு இந்த நடவடிக்கையை முன்னெடுத்துள்ளார் மேற்படி அமைப்பின் தலைவர் எஸ்.கே.கிருஷ்ணா.

தலைநகரில் வறுமை கோட் டுக்கு கீழ்வாழும் மக்களின் துயர் துடைக்கும் செயற்திட்டங்கள் பல வற்றை கடந்த காலங்களில் நவோதயம் இளைஞர் அமைப்பு மேற்கொண்டு வந்துள்ளது. குறிப்பாக இவ் வாறான மக்களுக்கு நிவாராண உத விகளை வழங்கும் ஏற்பாடுகளையும் அவர்களது குழுந்தைகளின் கல்வி வளர்ச்சிக்காக பாடசாலை உபகரணங்களை வழங்கும் திட்டங்களையும் சிறப்பாக வழிநடத்தி வந்துள்ளது.

இத்தகைய நிலையில் நவோதயம் இளைஞர் அமைப்பு அரசியல்ரிதியான தனது அடிச்சுவட்டை பதித்துள்ளமை காலத்தின் அவசியம் எனக் கருதப் படுகின்றது.

இலங்கையைப் பொறுத்தவரையில எந்தவொரு அமைப்பும் ஒரு அரசியல் பின்னணியின்றி தனது செயற்பணி-களை முன்னெடுத்துச் செல்வது என்பது இலகுவான காரியமல்ல. எனினும் ஒரே குட்டையில் ஊறிய மட்டைகளா மாறி விடாது தமது தனித்துவத்தை நிலை நாட்டும் நோக்கில் குட்டைகளை தவிர்த்து தமது கொள்கைகளை முன்னெடுக்கும் நோக்கில் தமது அமைப்பையே அரசியல் கட்சியாக உரு வாக்க எஸ். கே கிருஷ்ணா முற்பட் டமை வறுமைகோட்டுக் கீழ் வாழும் மக்களின் மனங்களில் நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது.

இத்தயை நம்பிக்கை அவர்களின் மனங்களில் எழுவதற்கு முக்கிய காரணியாக இருப்பது தேர்தல்காலங்களில் மட்டும் மக்கள் மத்தியில் வந்து உறுதிகளையும் உத்தரவாதங்களையும் வழங்கிவிட்டு தேர்தலில் வெற்றி பெற்றதும் வாக்களித்த மக்களை மறந்து செயற்படும் அரசியல்வாதிகளும் கட்சிகளும் என்பது தான்.

தலைநகரைப் பொறுத்தவரையில் குறிப்பாக தமிழ் மக்களிடம், தனித்துவம் - தன்மானம் எனப்பேசி அவர்களது உணர்வலைகளை தட்டி எழுப்பியவர்கள் தமது தேர்தல் வெற்றிகளுக்காக மட்டும் வறுமைக்கோட்டுக்கு கீழ்வாழும் மக்களை பயன்படுத்தினர் என்பதே கடந்த கால வரலாறு. அந்த மக்களுக்காக அவர்கள் இத்தனை ஆண்டுகளின் செய்தது என்ன என்பதை சீர்தூக்கிப் பார்த்தால் ஒன்றுமில்லை என்பதே பதிலாக அமையும்.

இந்நிலையில் 'மக்கள் சேவையே மகேசன் சேவை' என்ற நோக்கில் நவோதயம் மக்கள் முன்னணி தனது பிரவேசத்தை ஆரம்பித்திருப்பது வரவேற்புக்குரியது காரணம் மக்களுக்கு எத்தகைய தேவைகள் இருக்கின்றன என்பதை அறிந்து, அவற்றை நிறைவேற்றுவதற்கான பணிகளை தொடர்ச்சியாக செய்துகொண்டு தமது பணிகளுக்குத் தேவையான அங்கீகாரங்களைப் பெற்றுக் கொள்வதற்காக தமது அரசியல் நடவடிக்கைகளை மேற்கொள்ள முற்பட்டுள்ளமையை ஒரு புதிய சிந்தனையாக நவோதய மக்கள் முன்னணியின் உதயத்தில் இருப்பதை பார்க்கமுடிகிறது.

இத்தகை சிந்தனை கொண்ட சக்தியை கட்டியெழுப்ப வேண்டியது நமது கடமையல்லவா? இதற்கான உங்கள் பங்களிப்பு என்ன என்பதை இப்போதே உறுதி செய்ய வேண்டாமா? எங்கே உங்கள் கரங்கள் நீளட்டுமே!

# JOKE

யோவ் என்னய்யா பொலிஸ் ஸரேசனுக்குள்ள மாட்டை ஓட்டிக்கிட்டு வர்ற

நம்ம ஏட்டய்யா நல்லா லாடன் கட்டுவாருன்னு சொன்னாங்களே...!

---

பிரசவத்துக்காக எங்க அம்மா வீட்டுக்கு போனப்போ இவருக்கு சமைக்கிறதுக்குன்னு வேலைக்காரியை வைச்சது தப்பா போச்சு

ஏன் என்னாச்சு?

அவ ,இப்ப அவங்க அம்மா வீட்டுக்கு போயிட்டா பிரசவத்துக்கு

---

ஏண்டா நான் பாடம் நடத்தும் போது ஏன் அவன் சொல்லாம கொள்ளமா வெளியே போறான்

அவனுக் தூக்கத்தில நடக்கிற வியாதி இருக்கு சேர்

---

ஏன் சார் நடக்கிறீங்க வாங்க லிப்ட்ல போகலாம்

எதுக்கு சீக்கிரம் மேல போகலாம் சார்

இன்னும் கொஞ்சக் காலம் இருந்துட்டுப் போகலாமுன்னு நினைக்கிறேன்

---

டாக்டர் நீங்க எழுதி கொடுத்த மருந்தை எங்கெங்கோ-வெல்லாம் கேட்டுப் பார்த்தேன்

எங்கேயும் இல்லை என்னுட்டாங்க

எங்க துண்டைக் கொண்டு வாங்க பார்ப்போம்

ஏங்க நான் பேனா எழுதவில்லை எனக் கிறுக்கினா துண்டை நீங்களா தூக்கிட்டுப் போனீங்க?

## சிரிக்க வேண்டாம்









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாதனையை தடுக்குமா தூக்கு?



இந்திய முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலைக் குற்றத்துடன் தொடர்புடைய பேரறிவாளன், முருகன், சாந்தன் ஆகியோருக்குத் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டு கடந்த செப்டெம்பர் 9, 2011 அன்று அந்தத் தண்டனை நிறைவேற்றப்பட இருந்தது.

எனினும், குற்றவாளிகளின் மேன்முறையீடுகள், மற்றும் தமிழக அரசினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம் என்பவற்றால் இவர்கள் மீதான தண்டனையை நிறைவேற்ற முடியாமல் அந்த வழக்கு தற்போதும் நிலு வையில் உள்ளது.

இந்நிலையில், இந்தியாவில் நடைபெற்று முடிந்த பிளஸ் 2 தேர்வு முடிவுகள் அண்மையில் வெளியாகியிருந்தன. இந்தத் தேர்வை பள்ளியில் படிக்கும் மாணவர்களும், தனித்தேர்வர்களும் எழுதினர்.

தனித்தேர்வர்களில் சிறைக் கைதிகளும் அடக்கம். இந்திய முன்னாள் பிரதமர் ராஜிவ் காந்தி கொலை வழக்கில் கைதுசெய்யப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டுள்ள பேரறிவாளன், முருகன் ஆகியோ ரும் இந்த ஆண்டு பிளஸ் 2 தேர்வை எழுதியிருந்தனர்.

வெளியான தேர்வு முடிவுகளின்படி பேரறிவாளன் 1200இற்கு 1096 மதிப்பெண்களைப் பெற்றுள்ளார்.

வேலூர் சிறையில் இருக்கும் முருகன் 1200இற்கு 983 மதிப்பெண்களைப் பெற்றுள்ளார். குறிப்பாக வணிகவியல் பாடப்பிரிவில் முருகன் 200இற்கு 200 பெற்றுள்ளார்.

இது எந்தவொரு மனிதரதும் திறமைகளை எந்தவொரு சக்தியாலும் தடுக்க முடியாது என்பதைக் காட்டுகிறது.

எனவே, தூக்குத் தண்டனைக் கைதிகளின் திறமையை சாதனையை ஊக்குவிக்க, அவர்களை விடுதலை செய்யவேண்டும் என்று தற்போது கோரிக்கைகள் விடுக்கப்பட்டு வருகின்றன.

உண்மையில் அவர்கள் விடுவிக்கப்பட்டால் அவர்களது தனிப்பட்ட நன்மைகள் தவிர, நாட்டுக்கும் ஏன்... இந்த முழு உலகத்துக்கும் ஒரு எடுத்துக்காட்டாக அமையும் என்பது கண்கூடு.



**கேள்வி : என்பிரண்டு எப்போ பார்த்தாலும் குத்து மதிப்பா.. குத்துமதிப்பா எங்கிறான் ஆமா இந்த குத்துமதிப்பு எங்கிறது என்னாங்க?**

**ராஜேஸ் - நீர்கொழும்பு**

பதில் : கிட்டதட்ட எனக்கும் இதுல சந்தேகம் இருக் குங்க எதுக்கும் ஒருக்கா மாமியார் வீட்டுக்குப் போய் கேட்டுப்பாரும்

**கேள்வி: தமிழுக்காக குரல் கொடுக்கும் உண்மை யான தமிழன் யார்?**

**பாலகிருஷ்ணன் - பேலியாகொடை**

பதில் : தேடுகிறோம்... தேடுகிறோம்... தேசத்தின் வெளி யெங்கும் வெறுமைதான் கைகளிலே...
(மன்னிக்கவும் காசி ஆனந்தன் ஆகும் ஆசையில் ஒரு பதில்)

**கேள்வி : ஐயா பாம்பாட்டியாரே எதுக்கும் நீங்க லயக் கில்லைன்னு நம்ம விட்டில சொல்றாங்க என்ன செய்யலாம்?**

**சுந்தரம் - தெமட்டக்கொடை**

பதில் : இந்த மாதிரி பேச்சுவாங்கிறவங்க நிறைபேர் உண்டு. ஆமா.. பேசுறது யாருன்னு சொல்லவே இல் லையே.. சுந்தரம் மனைவியா இருந்தா கவனம்.

**கேள்வி : இந்த ஐ.பி.எல்லில சென்னை ஏன் தோல் வியை தழுவிச்சுது.. என் சந்தேகத்தை தீப்பிரா?**

**அஜா- கண்டி**

பதில் : புரளியை (சூதாட்டம்) கிளப்பி விடுறதுல கில்லா டிகள் இருக்காங்க இது தான் உமது சந்தேகத்துக்கு காரணம் என நினைக்கிறேன். போட்டின்னா ஒர் அணி தோக்கணும்தானே?

**கேள்வி : உண்மையை சொல்லும் தினமகுடி விற் பனை ஆகின்றதா?**

**கண்ணன் - பம்பலப்பிட்டி**

பதில் : தினமகுடியில கேள்வி கேட்கனும் என்ற எண்ணம் உமக்கு வருவதற்கு இதை நீர் படித்தது தானே காரணம் எனக்கு தெரி யும் நீர் ஒசியில இதைபடிச்சிருக்க மாட்டி ருன்னு.

**கேள்வி : தமிழரசுக்கு கட்சி இப்போ மாநாடு நடத்தியிருக்கே எதுக்கு?**

**ரவிசங்கர் - கிளிநொச்சி**

பதில் : பட்ட துயரங்களையெல்லாம் பொறுத்துக்கிட்டு இன்னமும் பொறுமை காருங்க என்னு சொல்லுறதுக்கு

**கேள்வி : பாம்பாட்டியாரே.. என் காதலி என்னோட அடிக்கடி சண்டைபிடிக்கிறா அதை நிறுத்த ஏதாச்சும் வழி சொல்லும்.**

**சஞ்சயன் - வவுனியா**

பதில் : என்னத்துக்கு சண்டைபிடிக்கிறா எங்கிறதை சொல்லாமா இப்படி மொட்டையா கேட்ட எப்படி? எதுக்கும் அவ கேட்கிறதையெல்லாம் ஒரு டொஸ் டிங்கா கொடுத்துதான் பாருமேன்.

**கேள்வி : தொழில் தேடி களைத்து விட்டேன் ஏதாச்சும் ஐடியா ஒன்னு சொல்லும் பாம்பாட்டியாரே?**

**செந்தில் - வத்தளை**

பதில் : பேசமா தமிழ்நாட்டுக்குப் போய் சாமியாராகிடல- ாமே... ஆதீனங்கல்ல பெரும் பணம் புரளுதாமே

**கேள்வி: நம்ம நாட்டில திரைப்படத்துறை வளராம இருப்பதற்கு காரணம் என்ன?**

**தில்லைநாதன் - யாழ்ப்பாணம்.**

கேரளா மாதிரி இன்னொரு மாநிலம் நமக்கு இல்லையே

**கேள்வி : என் மனைவி என்னை எப்ப பார்த்தாலும் மொக்கு .. மொக்கு எங்கிறா என்ன செய்யலாம்?**

**நிசாந்தன் - வெல்லம்பிட்டி**

பதில் : ஏற்கனவே பண்ணின மொக்குத்தானத்துக்கு (தாலி கட்டியதற்கு) தான் வாங்கி கட்டுறீர் என நினைக்கிறேன் இனியும் எக்குத்தப்ப எதுவும் பண்ணிட- ாதையும் தலை தப்பிறது தம்பிரான் புண்ணியம்.

**கேள்வி : அன்பின் பாம்பாட்டியரே நடிகைகள் கனவில் வாறாத சொல்பவர்கள் பற்றி என்ன நினைக்கிறீ?**

**சாந்தி - மட்டக்குளி**

பதில் : இதுதான் வாலிப வயசு




சிறந்த கேள்விக்கான
500 ரூபா பணப் பரிசை
பெறுபவர்

**ரவிசங்கர்- கிளிநொச்சி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## தேச வழமைச் சட்டம்

தேசவழமைச் சட்டம் என்பது ஒல்லாந்தர் ஆட்சிக்காலத்துக்கு முன்னர் யாழ்ப்பாணத்தில் வழங்கிய வழக்கங்களை (customs) அடிப்படையாக வைத்து யாழ்ப்பாண முதலிமாரின் உதவியுடன் ஒல்லாந்தரால் இது 1707 ஆம் ஆண்டு எழுத்து மூலமாக்கப்பட்டது. பின்னர் ஆங்கிலேயரால் 1806 ஆம் ஆண்டு சட்ட மூலமாக்கப்பட்டது. இச்சட்டமானது பின்னர் 1869 இலும் பின் 1911 இலும் கடைசியாக 1948 இலும் திருத்தியமைக்கப்பட்டது.

கிபி 1620 ஆம் ஆண்டுக்கு முன்னர், இலங்கையின் வட-பகுதியில், தமிழர்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட தனியான நாடு இருந்தது. இதுவே யாழ்ப்பாண அரசு அல்லது யாழ்ப்பாண இராச்சியம் எனப்படுகின்றது. கி.பி 1620 இல் போத்துக்கீசர் யாழ்ப்பாண இராச்சியத்தைக் கைப்பற்றித் தங்கள் நேரடி ஆட்சியின் கீழ்க் கொண்டுவந்த பின்னரும், அவர்கள், யாழ்ப்பாணத்தின் உள்ளூர் முதலி-மார்கள் ஊடாகவே மக்களைக் கட்டுப்படுத்தி வந்தமையால் பழைய நடைமுறைகளே யாழ்ப்பாணத்தில் தொடர்ந்தும் பின்பற்றப்பட்டன.

1658 இல் யாழ்ப்பாணம் போத்துக்கீசரிடமிருந்து ஒல்லாந்தர் கைக்கு மாறியது. . 18 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில், யாழ்ப்பாண இராச்சியத்தின் குடிகளைக் கட்டுப்படுத்துவதற்கான சட்டங்களை எழுத்து மூலமாகத் தொகுக்கும் பொறுப்பு, அன்றைய டச்சு ஆளுனர் கோர்னெலிஸ் ஜோன் சைமன்ஸ் (Cornelis Joan Simons) என்பவரால் யாழ்ப்பாணத்தில் திசாவை (Dessave) பதவி வகித்த கிளாஸ் ஈசாக்ஸ் (Class Isaksz) என்பவருக்கு வழங்கப்பட்டது. அவர், யாழ்ப்பாணத்து முதலியார்கள் 12 பேரின் உதவியுடன் நாட்டின் வழமைகளைத் தொகுத்தார். இதுவே தேச-வழமைச் சட்டம் எனப்படுகின்றது. ஜூன் 4,1707 ஆம் ஆண்டில் ஒல்லாந்த அரசினால் யாழ்ப்பாணத்துக்கு உரிய சட்டமாக இது ஏற்றுக்கொள்ளப்பட்டது. இச்சட்டம் டச்சு மொழியில் எழுதப்பட்டுத் தமிழிலும் மொழிபெயர்க்கப்பட்டது

## சிங்களம் மட்டும் சட்டம்

சிங்களம் மட்டும் சட்டம் (Sinhala Only Act) அல்லது அதிகாரபூர்வமாக 1956 ஆம் ஆண்டின் 33ஆம் இலக்க அரசகரும மொழிகள் சட்டம் (Official Language Act) என்பது எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டார நாயக்க தலைமையிலான இலங்கை அரசாங்கத்தால் 1956 ஆம் ஆண்டு ஜூன் 5 ஆம் திகதி இலங்கை நாடா-ளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட "சிங்களம் மட்டுமே இலங்கையின் அரசகரும மொழி" என்ற சட்டத்தைக் குறிக்கும்.

1936 ஆம் ஆண்டில் இலங்கை அரசாங்க சபைத் தேர்தலில் வெற்றி பெற்ற இடதுசாரிகளான என். எம். பெரேரா, பிலிப் குணவர்தனா போன்றவர்கள் ஆங்கிலத்திற்குப் பதிலாக சிங்களம், மற்றும் தமிழ் ஆகியவற்றை ஆட்சிமொழிகளாக்க வேண்டும் என வலியுறுத்தினார்கள்.

நவம்பர் 1936 இல், "இலங்கைத் தீவு முழுவதும் உள்ளாட்சிகள் மற்றும் காவல்துறை நீதிமன்றங்களில் உள்ளூர் மொழிகளிலேயே வழக்குகள் நடத்தப்பட வேண்டும்" மற்றும் "காவல் நிலையங்களில் சாட்சிகளின் மொழிகளிலேயே வழக்குகள் பதியப்பட வேண்டும்" போன்ற சட்டமூலங்கள் அரசாங்க சபையில் கொண்-டுவரப்பட்டு சட்டச் செயலாளருக்கு மேலதிக ஆணைக்-காக அனுப்பப்பட்டடன.

1944 ஆம் ஆண்டில் ஜே. ஆர். ஜெயவர்தனா ஆங்கிலத்துக்குப் பதிலாக சிங்களத்தை அதிகார-பூர்வமொழியாக்க வேண்டும் என அரசாங்க சபையில் கோரினார் ஆனாலும் ஆங்கிலம் தொடர்ந்து 1956 வரை ஆட்சி மொழியாக இருந்து வந்தது.

1948 ஆம் ஆண்டில் இலங்கை பிரித்தானியரிடம் இருந்து விடுதலை பெற்று டொமினியன் அந்தஸ்து பெற்றது. 1951 ஆம் ஆண்டில் பண்டாரநாயக்கா ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து விலகி இலங்கை சுதந்திரக் கட்சி என்ற பெயரில் புதிய கட்சியை ஆரம்பித்தார்.

இக்கட்சியின் மகாஜன எக்சத் பெரமுன கூட்டணி 1956 தேர்தலில் பெரும் வெற்றி பெற்றது. பண்டாரநாயக்காவின் அமைச்சரவை பதவியேற்று 53 நாட்களுக்குள் (1956,, ஜூன் 5) சிங்களம் மட்டும் சட்டம் பிரதிநிதிகள் சபையில் நிறைவேற்றப்பட்டது. இச்சட்டமூலத்துக்கு ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவளித்தது. தமிழ்க் கட்சிகள், மற்றும் சமசமாஜக் கட்சி,கம்யூனிஸ்டுகள் எதிர்த்து வாக்-களித்தன. இம்மசோதா 1956 ஜூலை 6 இல் செனட் சபையில் நிறைவேற்றப்பட்ட போது 19 பேர் ஆதரவாகவும், 6 உறுப்பினர்கள் எதிர்த்தும் வாக்களித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## மனம் கொத்திப் பறவை

சின்ன விஷயத்துக்கு கூட பத்து பேரை வெட்டி சாய்க்கிற அப்பா. சித்தப்பா, அண்ணன்களைக் கொண்ட வசதியான வீட்டுப் பொண்ணு ஆத்மியா. அவங்க வீட்டு நேர் எதிர் வீட்டு பையன் சிவகார்த்திகேயன். அவங்க அப்பா (இளவரசு) ஆத்மியாவின் அப்பா கட்டும் புதிய பள்ளிக்கூடத்தின் கட்டிட காண்ட்ராக்டை எடுத்து செய்து கொண்டிருக்கிறார். மகன் சிவா-வோ படிச்சுட்டு சில நேரங்களில் அப்பாவுக்கு உதவியா பல நேரங்களில் நண்பர்களுடன் வெட்டியா ஊரை சுத்தி வருகிறான். ஆத்மியாவும் சிவகார்த்திகேயனும் அன்புடன் பழகுகிறார்கள். திடீரென ஒரு வீச்சரிவா மீசை மாப்பிள்ளை வருகிறார்.




அவருக்கு ஆத்மியாவை நிச்சயம் பண்ணுகிறார்கள். இதைக் கேள்விப்பட்ட சிவா துடிதுடித்துப் போகிறான். தன் மனதில் இருக்கும் காதலை அவளிடம் சொல்கிறான். தனக்கு நிச்சயம் ஆனதை காரணம் காட்டி விலகிப் போகிறாள் அவள். அவளையே நினைத்து குடி மயக்கத்தில் புலம்பும் சிவாவை ஆத்மியாவுடன் சேர்த்து வைக்க முடிவு செய்யும் நண்பர்கள் ஆத்மியாவை மயக்கமடையச் செய்து இருவரையும் கடத்திக் கொண்டு போகிறார்கள். கண்விழித்த ஆத்மியாவோ தனக்கு சிவா மீது காதல் இல்லை என்கிறாள். அவனோ அவள் தனக்கு வேண்டாம் என்கிறான். இந்நிலையில் ஆத்மியா வீட்டில் அவர்களை வலைவீசி தேடுகிறார்கள். தொடர்ந்து வரும் பல பிரச்சினைகளுக்கு மத்தியில் முடிவு என்ன என்பதை சுவாரஸ்யமாக சொல்லியிருக்கிறார்கள்.

மெரினா படத்திற்கு பிறகு முழு நீள கதாநாயகனாக வருகி-றார் சிவகார்த்திகேயன். முதல் பாதியில் இவரை கலங்க விட்டிருக்கிறார்கள். அடுத்த பாதியில் இவர் களைகட்ட வைக்கிறார். இவருக்கு ஜோடியாக ஆத்மியா. பெரும்பாலும் சேலைகளிலேயே வருவதால் அம்மனாக ஜொலிக்கிறார். முதல் பாதியில் கேர் பண்ணாத இவருடைய நடிப்பு அடுத்த பாதியில் ரொம்பவே ஸ்கோர் பண்ணுகிறார் ஆத்மியா.

சிவகார்த்திகேயனுக்கு நண்பர்களாக வருகி-றார்கள் சூரி, சிங்கம்புலி வகையறா. சூரியும் சிங்கம் புலியும் கம்பெனி போட்டு அடிக்கிற லூட்டி உசுப்பு கிறது. இடைவேளையில் என்ட்ரி கொடுக்கும் சாம்சும் அவர் நண்பரும் வந்த பிறகு படம் விறுவிறுப்பாகவும் செம காமடியாகவும் நகர்கிறது. ஆத்மியாவையும் சிவகார்த்திகேயனையும் ஆத்மியாவின் அண்ணன் டீம் தேடும் போது சிங்கம் புலியையும் சூரியையும் அழைத்துக் கொண்டே போகும் இடமெல்லாம் செல்கிறார்கள்.

அவர்களிடம் வம்படியாக மாட்டிக் கொள்ளும் சாம்ஸ் இந்த காட்சிகள் அரை நிமிடங்களுக்கு தொடர்ந்து வரும் காமெடியாக இருக்கிறது. டிங் டிங் குத்துப்பாட்டு ஆட்டம் போட வைக்கிறது.

படத்தை இயக்கியிருக்கிறார் எழில். துள்ளாத மனமும் துள்ளும், பெண்ணின் மனதைத் தொட்டு போன்ற வெற்றிப் படங்களை இயக்கிய எழில் இந்தப் படத்தின் மூலம் இணைத் தயாரிப்பாளராகவும் உருவெடுத்திருக்கிறார். காதல், காமெடி, கலாட்டா என வழக்கமான ஸ்டைல் கதை என்றாலும் இடை-வேளை ட்விஸ்ட்,மாறுபட்ட திரைக்கதை யுக்தியில் படத்தை வேறு பாதையில் பயணிக்க வைத்திருக்கிறார் எழில்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதெல்லாம் சகஜமப்பா

**தமிழ்தரப்பு அரசியல் தளத்தில் இப்போ நாளுக்கு நாள் சம்பவங்களும் தகவல்களும் நர்த்தனம் ஆடுகின்றன. மே மாதத்திற்கான தினமகுடியில் வெளிவந்த "முரண்பாடுகள் முற்றுகின்றன" என்ற பத்தியில் எதிர்வு கூறப்பட்ட விடயம் இப்போது வெடித்துச் சிதறியுள்ளது என்பதை வாசகர்கள் ஏற்பர்.**

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுவின் தலைவர் சம்பந்தன் கூட்டமைப்பை சிதைக்க முனைகிறார் என்று அக்கட்சியின் நாடாமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச் சந்திரன் போர் கொடி தூக்கியிருக்கிறார்.

மட்டக்களப்பில் நடைபெற்ற தமிழரசுக்கட்சியின் மாநாட் டின் பின்னர் இந்தக் கருத்தை அவர் வெளியிட்டதற்கான பின்னணி என்ன என்பது குறித்து அரசியல் ஆர்வலர்கள் பலரிடமும் இன்று கேள்வி எழுந்துள்ளது.

தமிழர்கள் தமது அபிலாஷைகளை எட்டவேண்டும் என்பதற்காக ஆதரவளித்த ஒரு கூட்டு அமைப்பு இவ்வாறு தமக்குள் முரண்பாடு கொள்வது ஆரோக்கியமானதா என்பதே பலரது கேள்வியாகவுள்ளது. இதேவேளை இத்தகைய நிலைமை ஏற்படுவதற்கான நடைமுறைகள் குறித்தும் சுட்டிக் காட்டப்படுகிறது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பொறுத்தவரையில் அதற்குள் தமிழரசுக் கட்சியினரின் ஆதிக்கம் அதிகம் என்பதும் அவர்களுக்கே முக்கியத்துவம் வழங்கப்படுகிறது என்பதும் இந்த புகைச்சல் எழுவதற்குக் காரணமாக இருக்கிறது

இந்நிலையில், திடீரென தமிழரசுக்கட்சி தனது மாநாட்டை நடத்தி அதில் நிர்வாகிகளைத் தெரிவு செய்து தனது கொள்கை விளக்கங்களை எல்லாம் வெளியிட்டிருப்பது சற்று சிந்திக்கச் செய்கிறது அல்லவா?

ஒரு பக்கம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பதிவு செய்ய வேண்டும் என இதில் அங்கம்வகிக்கும் நான்கு கட்சிகள் ஒரேகுரலில் கோரிக்கை விட்டபோது தவிர்க்க முடியாத நிலையில் தமிழரசுக்கட்சி உடன்பட்டதும் பின்னர் உரிய முறையில் ஆவனங்கள் வழங்கப்படாமையால் இந்த விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டது என்பதும் முந்தைய தகவல்கள் ஆகும்

இந்த நடைமுறை தான் முரண்பாடுகள் மேலும் முற்று வதற்கு காரணமாக அமைந்தது என உள்வீட்டுத் தகவல் கள் தெரிவிக்கின்றன.


அதாவது தமிழ்த்தேசியக் கூட்டமைப்பை பதிவு செய்யும் விடயத்தில் தமிழரசுக்கட்சி தொடர்ந்தும் தாமதம் காட்டுமானால் ஏனைய நான்கு கட்சிகளும் இந்த நடவடிக் கையை மேற்கொள்ளும் எனத் தெரிவித்த நிலையிலேயே தமிழரசுக்கட்சி பின்னர் இறங்கிவந்து அவசர அவசரமாக பதிவுக்கான ஏற்பாடுகளை மேற்கொண்டதாக தெரிவிக் கப்படுகிறது.

இந்நிலையில் தொடர்ந்தும் கூட்டமைப்பின் செயற்பாடு களில் இத்தகைய அழுத்தப் போக்கை ஏனைய நான்கு கட்சிகளும் மேற்கொள்ளும் சாத் தியங்கள் தொடரும் என்பதனைக் கருத்தில் கொண்டே தமிழரசுக் கட்சி தனது தனிவழியை தயார் படுத்த தொடங்கியுள்ளது எனவும் தகவல்கள் தெரிவிக் கின்றன.

நடந்த உண்மைகளை மறைத்துக் கொண்டு ஊடகங்கள்தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் பேதங்களை ஏற்படுத்து முனைகின்றன எனத் தமிழரசுக் கட்சியின் தலைவர் சம்பந்தன் கருத்து வெளியிட்டு வருகி றார்.

இது மட்டுமின்றி கூட்டமைப்புகள் எந்தவித வித பிரி வினைகளும் இல்லை என அடித்தக்கூறுகிறார். அரசி யலில் இதுவெல்லாம் சகஜமப்பா என்பது போல் தமிழர்கள் இவர்களது கயிறிழுப்புகளை எல்லாம் தொடர்ந்து ஏற்றுக் கொள்வார்கள் என நினைத்தால் தோல்விதான் மிஞ்சும்.

கரும்புகட்டோடு இருந்தால் எறும் புக்கு அங்கு வேலையிருக்காது என்பதை கூட்டமைப்பினர் கருத்தில் கொள்வது சாலச்சிறந்தது.



ஆக்கம்:
பி.ஜி.ஆர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊர் போல் வருமா?

மீனா லண்டன்

**விமானம் யாழ்ப்பாணம் பலாலியில் இருந்து கிளம்புகிறது. ஏக்கம் கவ்விய மனதோடு கவின் யன்னலோர இருக்கையில் இருந்து சொந்த தேசத்தின் அவலங்களை பார்த்தபடி பறக்கிறான். என்ன அழகான தேசம், என்ன நேர்த்தியான கட்டுமானங்கள், கட்டம் கட்டமாக வயல்களும் தோட்டங்களும், இன்று அவை இருந்த அடையாளங்கள் சிதைந்து சின்னாபின்னமாகி..காவலரண்களால் நிறைந்திருக்கின்றன. காணும் காட்சி கவலையைத் தந்தாலும் ஐரோப்பிய இயந்திர வாழ்க்கைக்குள் செயற்கைச் சூழலுக்குள் கடந்த பதினைந்து ஆண்டுகளாக சுழன்றவனுக்கு சொந்த தேசத்தின் அலங்கோலம் கூட ரசிக்கக் கூடியதாவே இருந்தது.**

அன்று ஒரு நாள், அதிகாலை நேரம்,- சன்னங்கள் வீட்டு யன்னல்களைப் பதம் பார்க்கின்றன. நாய்கள் விடாமல் தொடர்ந்து குரைக்கின்றன. "பூட்ஸ்" சத்தங்கள் வீட்டைச் சுற்றிவளைக்கின்றன. சிறிது நேரம் கழித்து பூட்டப்பட்டிருந்த வீட்டுக் கதவு தட்டப்படுகிறது. "சலோ சலோ" என்று ஹிந்தியில் சொல்லி சிலர் கத்துகிறார்கள். "அம்மா இந்தியன் ஆமி வந்திருக்கிறான் என்ன செய்யுறது" கவின் சிறுவனாக பயத்தால் குரல் நடுங்கியபடி, தாயை அணைத்துக் கொண்டு கேட்கிறான். " பொறு.. பயப்பிடாத.. அப்பா போய் என்னென்று பார்ப்பார்.." அம்மா மகனைத் தேற்றியபடி. கணவனைப் பார்த்து "என்னங்க தனியப் போகாதேங்கோ நாங்களும் வாறம்". தகப்பன் முன்னே செல்ல தாயும் கவினும் பின்னே நிற்க, கதவு திறக்கப் பட்டதும் ஹிந்தியில் ஏதோ கத்தியபடி இந்தியன் ஆமி வீட்டுக்குள் நுழைந்து நாலு பக்கமும் சூழ்ந்து கொள்கிறது. அவர்களில் ஒருவன் சென்னைத்தமிழில் " உங்க வீட்டுக்க எல்.ரி.ரி.ஈ ஆக்கள் பதுங்கி இருக்கிறதா..? சோதனை பண்ணனும்". அவன் சொல்லி முடிப்பதற்குள் வந்த மற்றையவர்கள் வீடு முழுவதும் தட்டிக் கொட்டி சோதனை செய்யும் சத்தம் கேட்கிறது.

தொடங்கிய சோதனை முடிவதற்குள் மீண்டும் அந்த ஆமிக்காரன் தமிழில் " உங்க வீட்டில இருந்துதான் எல்.ரி.ரி.ஈ சுட்டிருக்கு.. விசாரணைக்கு ஒருவர் வரனும்" அதைக்கேட்ட கவினின் அப்பாவும் அம்மாவும் செய்வதறியாது திகைத்துப் போயினர். " என்ர அவரை தனிய விட ஏலாது நானும் பிள்ளையும் கூட வாறம்" என்று கவினின் அம்மா காட்டமாகச் சொல்ல " எல்லாரும் நட, ஜீப்பில ஏறு" என்று உத்தரவு வருகிறது. நடந்த சம்பவம் தொடர்பாக எதுவும் அறியாத அவர்கள் மூவரும் வாகனம் ஒன்றில் ஏற்றப்பட்டு கண்கள் கட்டப்பட்டு நீண்ட பயணத்தின் பின் முகாம் ஒன்றில் இறக்கப்பட்டு விசாரிக்கப்படுகின்றனர். விசாரணையின் பின் தாய் வேறாகவும் தகப்பனும் சிறுவனான கவினும் சேர்த்து வேறாகவும் பிரிக்கப்பட்டு அடைக்கப்படுகின்றனர். பல மணி நேரம் விசாரணை தொடர்வதாக சொன்னாலும் இறுதியில் கவின் மட்டும் வற்புறுத்தி வீட்டுக்கு அழைத்து வரப்படுகிறான். பள்ளிச் சிறுவன் என்று காரணம் காட்டி அவனை வீட்டில் விட்டுவிட்டு சென்றுவிட்டார்கள்.

அந்த நாள் வரை தாயையும் தந்தையும் பிரிந்தறியாத கவின் அன்று அவர்களின் பிரிவால் பெரும் துன்பப்பட்டான். பதட்டம் பயம் ஒரு புறம் பெற்றோறைப் பிரிந்த கவலை மறுபுறம் வாட்ட அக்கம் பக்கத்தில் உள்ளவர்கள் அவனின் துன்பத்தைப் பாராது விடுப்பு கேட்பதிலேயே அதிகம் அக்கறை காட்டினர். அதுவும் கூட அவனுக்கு மிக வேதனை அளித்தது. பிறர் உதவிகள் ஏதும் இல்லாது தனிமைக்குள் தனித்துவிட்ட சின்னவனான கவின் வீட்டில் அழுதபடி கண்ணீரோடு காலம் தள்ளத்தொடங்கினான். அதுவே தொடர்கதையுமானது. இப்படியே வந்த நாட்கள் சோகமாக கடந்தனவே தவிர தாயும் தகப்பனும் விடுவிக்கப்படுவதாக இல்லை. பின்பு ஒரு நாள் தாயும் தகப்பனும் காங்கேசன்துறை இந்திய இராணுவ வதை முகாமுக்கு மாற்றப்பட்டு அங்கு நீண்ட நாள் காவலில் அடைக்கப்பட்டிருப்பதாக உறவினர்கள் மூலம் அறிந்து கொண்டான். நீண்ட நாள் பெற்றோரின் பிரிவு,அது தந்த விரக்தி, நீதி என்பதே கிட்டாது எனும் போது எழுத்த ஆதங்கம், மனச்சோர்வு இவை தந்த பாதிப்புக்களால் வாழ்கையில் வெறுமைக்குள் சென்ற கவின் யாருக்கும் சொல்லாமல் கொள்ளாமலே வீட்டை விட்டு வெளியேறி இயக்கத்தோடு இணைந்து செயற்படத் தொடங்கினான். சில காலம் இயக்கத்தோடு செயற்பட்ட பின் அவன் ஐரோப்பாவுக்கு நெருங்கிய உறவினர்களால் அழைக்கப்பட்டுக் கொண்டான்.

ஐரோப்பிய மண்ணில் பல வித்தியாசங்களை சந்தித்த போதும் வசதிகள் வாய்ப்புக்கள் இருந்த போதும் அவனால் மனதளவில் அவற்றோடு ஒன்றித்து அவற்றை திருப்தியோடு அனுபவிக்க முடியவில்லை. அவற்றோடு ஒன்றித்து தன்னை வித்தியாசமானவனாக காட்டி போலியாக வாழவும் முடியவில்லை. பெற்றோரின் பிரிவும் அவர்களுக்கு என்ன நேருமோ என்ற ஏக்கமுமே அவனுக்குள் எப்போதும் குடிகொண்டிருக்கும். வீட்டு நினைவுகளால் அவன் அடிக்கடி ஆளப்படுவான். சொந்த மண்ணில் கண்ட அனுபவங்களே அவனை அந் நிய மண்ணிலும் கொள்கைப்பற்றோடு ஒரு தெளி வான வளமான இலட்சியத்தோடு பற்றுறுதியோடு வாழ வழி சொல்லிக்கொண்டிருந்தது. ஐரோப்பாவி லும் அவன் தனிமையையே விரும்பினான். தானும் தன் படிப்பும் வேலையும் அதுவே அவனுக்கு வாழ்வாகிப் போனது. மற்றைய ஊர் ஆட்கள் போல அவனால் சொந்த மண்ணின் அவலங்களை மறந்து சொந்த வாழ்வில் சந்தித்த துயரங்களை மறந்து போலிப் போர்வைக்குள் புகுந்து இயல்பான அடையாளங்கள் தொலைத்து ஐரோப்பியனாக தன்னை அடையாளம் காட்டி போலித்தனத்தன மாக வாழவும் அவனால் முடியவில்லை. அதற் காக அவன் அப்படி வாழும் மற்றவர்களைக் குறை கண்டதும் இல்லை. அவரவர் தங்கள் மனத்துக் குப் பிடித்தது போல வாழ்கிறார்கள்.அது அவரவர் சுதந்திரம் என்றுணர்ந்தும் கொண்டான்.

விமானம் இரத்மனால விமான தளத்தை நெருங்குகிறது. பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னர் இந்திய இராணுவ வதை முகாமுக்குள் விட்டு விட்டு வந்த பெற்றோரைக் கண்டு, கொஞ்சி மகிழ்ந்த திருப்தியும், சொந்த மண் பெரும் அவலத்தைக் கண்டிருந்தாலும் இன்னும் அழி யாது வைத்திருக்கும் சில அழகுகளை ரசித்த திருப்தியும் மனதிற்கு ஒரு சின்ன ஆறுதலை தந் தாலும், வானூர்தியில் இருந்து அவன் அவதா னித்த வடக்கு மண்ணின் கோலத்தையும் தெற்கு மண்ணின் கோலத்தையும் ஒப்பிட்ட பார்த்த போதுதான் தன் தாய் மண்ணின் ஏழ்மையையும் அவள் இன்னும் ஓரவஞ்சனையை சந்தித்துக் கொண்டிருப்பதையும் தெளிவாக உணர முடிந்தது. மனதில் அதை படமாக்கிப் பதிந்தும் கொண்டான். ஐரோப்பாவிலும் சரி தெற்கு மண்ணிலும் சரி கடனோ சொந்தமோ வசதிகள் என்று வாழ்ந்தா லும் அந்நியத்தனம் என்பது மனதுக்குள் தேடாமல் தேடி வரும் ஒன்று. அதை சொந்த மண்ணில் அவன் உணரவே வாய்ப்பிருக்கவில்லை. வசதிகளால் ஏழ்மை என்றாலும் சொந்த மண் மனதுக்கு தரும் திருப்தியால் என்றும் நிறைவானதுவே." சொர்க்கமே என்றாலும் நம்மூரைப் போல் வருமா"... என்ற கவிவரிகளின் யதார்த்தத்தை அனுபவம் தந்த உணர்வுகளால் உள்வாங்கியபடி கவின் கொழும்பு இரத்மனால விமான தளம் விட்டு வெளியே நடக்கிறான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
14.06.2012

# தின மகுடியின் கவிதைப் போட்டி

தலைப்பு:- "தமிழனும் தமிழும்"
"நட்பு எதுவரை"
"தற்காலப் பெண்ணியம்"

இத்தலைப்பினில் எதாவது ஒன்றைத் தெரிவு செய்து 20 வரிகளுக்குக் குறையாமல் எமக்கு எழுதி அனுப்பலாம்.

- ❖ எக்கவிதை வடிவமாயினும் சரி மரபுக்கவிதை-புதுக்கவிதை
- ❖ வயதுக் கட்டுப்பாடு இல்லை
- ❖ நடுவர்கள் தீர்ப்பே இறுதியானது
- ❖ கூப்பனோடு வரும் படைப்புக்கள் மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படும்.

Win Prizes!

**பரிசு விபரம்**

1 ஆம் பரிசு – 10,000 /=
2 ஆம் பரிசு – 5000 /=
3 ஆம் பரிசு – 3000 /=
ஆறுதல் பரிசுகள் இரண்டு. தலா –1000/=
பத்துப் பேருக்கு சான்றிதழ் வழங்கப்படும்.
விண்ணப்பங்கள் சேரவேண்டிய இறுதித் திகதி:- 10.08.2012

**தினமகுடியின் பரிசு மழை கூப்பன்**

பெயர் : ....................................
விலாசம் : ....................................
....................................
அ.அ.இல : ....................................
தொ.பேசி இல. : ....................................

## சுயதொழில் ஆர்வலர்களுக்கு சந்தர்ப்பம்

சுயதொழிலில் ஈடுபடவிரும்பும் பெண் ஆர்வலர்களுக்கு உதவி வழங்கும் வகையில் நவோதயம் இளைஞர் அமைப்பின் ஊடாக தினமகுடி வழங்கும் பரிசளிப்பு திட்டம் இம்முறை அறிமுகமாகின்றது.

தினமகுடி மாத இதழில் வெளிவரும் இந்தப் பரிசுக் கூப்பனை பூர்த்தி செய்து வெட்டி அனுப்புவதன் மூலமாக வாசகர்கள் இப்பரிசைப் பெற்றுக் கொள்ளமுடியும்.

குலுக்கல் முறையில் தெரிவுசெய்யப்படும் அதிஷ்டசாலி ஒருவருக்கு தையல் இயந்திரம் ஒன்று பரிசாக வழங்கப்படவுள்ளது. ஒருவர் எத்தனை விண்ணப்பங்களையும் அனுப்பலாம்.

**நவோதயம் வழங்கும் தினமகுடி பரிசு கூப்பன்**

பெயர் : ------------------------------------
முகவரி : ------------------------------------
------------------------------------
அ.அட்டை இல. : ------------------------
தொ.பேசி.எண் : ------------------------
திகதி : ................. கையொப்பம் : ...................

விண்ணப்பங்களை அலுவலக முகவரிக்கு அனுப்பி வைக்கவும்

## கைப்பைக்கு bye சொல்லும் bra!

இனி வரும் காலங்களில் பெண்கள் கைப்பையைக் கொண்டு செல்ல வேண்டிய அவசியமே இல்லை. அதற்குத்தான் புதிய கண்டுபிடிப்பு ஒன்று கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. பிராவின் சைட் பாகங்களில் ஐபோன் மற்றும் கிரடிட் காட்களை வைப்பதற்கு இடம் ஒதுக்கப்பட்டுள்ளதுதான் இங்குள்ள விசேடம். Seattles வாஷிங்டன் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த இரண்டு மாணவர்கள் தான் மேற்படி அரிய கண்டுபிடிப்பை நிகழ்த்தியுள்ளனர். இந்தப் பிராவில் வங்கி அட்டைகள், ஐ.டி காட்டுக்கள், மொபைல் போன்கள் போன்றவற்றைப் பாதுகாப்பாக வைக்க முடியுமாம்.



## உலக சாதனை படைத்த சொக்லேற்!



மெக்ஸிகோவில் சிச்வென் லிட்சாவில் உள்ள குகுல்கன் பிரமிட்டின் தோற்றத்தில் செக்லேற் ஒன்று வடிமைக்கப்பட்டுள்ளது அதன் நிறை 18,.239 இறாத்தல் ஆகும். இது இரண்டு யானைகளின் நிறைக்கு சமமானதாகும். இந்தத் சொக்லேற்றானது இதற்கு முன்பு இத்தாலியில் வடிவமைக்கப்பட்ட 10,736.5 இறாத்தல் நிறைக் கொண்ட சொக்லேற்றின் சாதனையை முறியடித்துள்ளது.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய ஹீரோ நாளைய ஸீரோ



பிரான்ஸ் நாட்டின் அதிபர் தேர்தலில் சோஷலிசக் கட்சியின் வேட்பாளர் ஃபிரான்ஷுவா ஹொலாந்த் வென்று பிரெஞ்சு அதிபராகப் பதவி ஏற்கிறார். சர்கோஸி மீது பிரெஞ்சு மக்களுக்கு ஏற்பட்டிருக்கும் அதிருப்தியும் வெறுப்பும்தான் ஹொலாந்தின் வெற்றிக்குக் காரணமே தவிர, அவரது செல்வாக்கோ, மக்களது எதிர்பார்ப்போ அல்ல என்பதுதான் பரவலான கருத்து.

பிரான்ஸ் நாட்டு வரலாற்றிலேயே இதுவரை எந்த ஓர் அதிபர் மீதும் பிரெஞ்சுப் புரட்சிக்குப் பிறகு இந்த அளவுக்கு வெறுப்பு இருந்ததாகத் தெரியவில்லை. பொருளாதார நெருக்கடியைப் போக்குங்கள் என்று மக்கள் குரல் எழுப்பியபோது, சிக்கன நடவடிக்கைதான் ஒரே வழி என்று உண்மையைச் சொன்னதுதான் சர்கோஸி மீதான வெறுப்புக்குக் காரணம். அறிவார்ந்த விஷயங்கள் எல்லாவற்றிலும், மற்றெல்லோரையும் விடத் தாங்கள் மேம்பட்டவர்கள் என்ற எண்ணம் கொண்டவர்கள் பிரான்ஸ் நாட்டினர். இத்தகைய மனோபாவம் கொண்டவர்களிடம் தங்கள் நாட்டின் பொருளாதார நிலைமை சரியில்லை என்கிற உண்மையை சர்கோஸி தனது வெளிப்படையான பேச்சுகளால், செய்கையால் வெளிப்படுத்தியதால் மக்களுக்கு அவர்மீது கோபம் ஏற்பட்டதில் வியப்பொன்றும் இல்லை.

பணிஓய்வு வயதை 60-லிருந்து 62 ஆக உயர்த்தினார் சர்கோஸி. இது பெரும் எதிர்ப்புக்கு வழி வகுத்தது. 60 வயதானவர்களை ஓய்வு கொள்ள அனுமதித்தால் அவர்களுக்கு ஓய்வூதியம் அளித்தாக வேண்டும். அந்த ஓய்வூதியத்தின் அளவு சம்பளத்தில் பாதியாக இருக்கிறது. ஓய்வூதியப் பலன்களையும் அளித்தாக வேண்டும். அரசு சிக்கன நடவடிக்கையில் இருக்கும்போது இது பெருஞ்செலவு. (ஏறத்தாழ இந்தியாவும் அதே பிரச்சினையை எதிர்கொள்கிறது என்பதை நாம் கவனிக்க வேண்டும்.)

ஆகவே, ஓய்வு வயதை 62ஆக உயர்த்த அனுமதித்தார். வேலையில்லாத இளைஞர்கள் தாங்கள் இன்னும் இரண்டு ஆண்டுகளுக்கு அவதிப்பட வேண்டுமா என்று கொதித்தெழுந்தனர். இதற்கிடையில் கார்லா புருணியைக் காதல் திருமணம் செய்துகொண்டதும் பிரெஞ்சு மக்களிடம் அவர் மீதான வெறுப்பை அதிகரிக்கச் செய்தது. அவர் கடந்த தேர்தலில் போட்டியிட்டபோது, லிபியாவின் மறைந்த அதிபர் கடாபியிடம் 5 கோடி யூரோவை தேர்தல் செலவுக்காகப் பெற்றுக்கொண்டார் என்ற குற்றச்சாட்டும் சேர்ந்து அவருக்கு எதிரான எதிர்ப்பு அலையை உருவாக்கியது. போதாக்குறைக்கு, பல பிரச்சினைகளில் அவர் எடுத்த அமெரிக்க ஆதரவு நிலையும் மக்களை முகம் சுளிக்க வைத்தது.

இப்போது அதிபராகத் தேர்வு செய்யப்பட்டுள்ள ஹொலாந்த் என்ன செய்யப்போகிறார் என்பதுதான் அனைவருடைய எதிர்பார்ப்பும். ஐரோப்பா முழுவதும் அவரது நடவடிக்கையை ஆவலுடன் எதிர்நோக்குகிறது. ஹொலாந்த் சொல்வதையெல்லாம் செய்ய முடியுமா என்பதும், அதனை நாடாளுமன்றம் அனுமதிக்குமா என்பதும் சந்தேகம்தான்.

அடுத்துவரும் நாடாளுமன்றத் தேர்தலிலும் சோஷலிசக் கட்சிக்கு அதிக இடங்கள் கிடைத்தால்தான், சொன்னதையெல்லாம் ஹொலாந்த் செய்ய முடியும். இல்லையென்றால், நாடாளுமன்றத்தின் ஒப்புதல் கிடைக்காமல் அவர் அறிவித்ததெல்லாம் வெறும் தேர்தல் வாக்குறுதிகளாகவே இருந்துவிடும்.

சோஷலிசக் கட்சியே அதிக எண்ணிக்கையில் நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றி பெற்றாலும்கூட, ஒரு மில்லியன் யூரோவுக்கு அதிகமாக சம்பாதிப்போருக்கு 75வீதம் வரி விதிக்கப்படும் என்கிற அவரது அறிவிப்பெல்லாம் சாத்தியமே இல்லை என்கிறார்கள். அத்தகைய நடவடிக்கையில் ஹொலாந்த் இறங்கினால், அந்த அளவுக்குச் சம்பாதிப்போர் யாரும் பிரான்ஸில் வசிப்பதையோ, தொழில் நடத்துவதையோ தவிர்த்துவிடுவார்கள். பிறகு, பிரான்ஸின் நிதி நிலைமை மேலும் மோசமடையும் என்று பொருளாதார நிபுணர்கள் கருத்துத் தெரிவிக்கிறார்கள்.


பிரான்ஸ், ஏற்கெனவே கடன் சுமையில் தத்தளிக்கிறது. மேலும் கடன் வாங்கித்தான் நிர்வாகத்தை நடத்த வேண்டும் என்கிற நிலைமை. பல மக்கள் நல சேவைகளை நிறுத்திவிட முடியாது. மானியங்களைத் தவிர்க்க முடியாது. 2012ஆம் ஆண்டுக்கு மட்டுமே 180 பில்லியன் யூரோ கடன் வாங்கியாக வேண்டும். 2013இற்கு 200 பில்லியன் யூரோ கடன் வாங்கியாக வேண்டும். அரசு இயந்திரம் மற்றும் மக்கள் நலத் திட்டங்களில் மாற்றங்களைக் கொண்டுவந்தாலொழிய நிலைமையைச் சீர் செய்வது கடினம் என்று பொருளாதார வல்லுநர்கள் கூறுகின்றனர்.

"2017 பட்ஜெட்டில் கடன் வெறும் பூஜ்ஜியமாக இருக்கும்" என்று தேர்தல் வாக்குறுதியில் ஹொலாந்த் சூளுரைத்தபோது, அது எப்படி சாத்தியம் என்று மக்களும் கேட்கவில்லை, அவரும் சொல்லவில்லை. கடினமான நடவடிக்கைகளை சர்கோஸி போல இவரும் மேற்கொண்டால் அவருக்கான நிலைமைதான் இவருக்கும் ஏற்படும் என்பதைச் சொல்லித் தெரிய வேண்டியதில்லை.

உலகளாவிய அளவில் மக்களின் எதிர்பார்ப்பு அதிகரித்திருக்கிறது. அந்த எதிர்பார்ப்பை எந்த ஒரு தலைவனாலும் பூர்த்தி செய்ய முடியாத அளவுக்கு நுகர்வுக் கலாசாரம் மக்களை மாற்றி இருக்கிறது. இந்த நிலையில், அரசியல்வாதிகள் ஒரு விஷயத்தை நன்றாகவே புரிந்து கொண்டிருக்கிறார்கள்.

பொய்யான வாக்குறுதிகளையும் மக்களை மயக்கும் கவர்ச்சித் திட்டங்களையும் அறிவித்து எப்படியாவது தேர்தலில் வெற்றி பெற்று ஆட்சியைப் பிடிப்பது ஐந்து ஆண்டுகளில் எவ்வளவு கொள்ளை அடிக்க முடியுமோ அடித்துவிட்டு, பணபலத்தால் மீண்டும் பதவி யைப் பிடிக்கப் பார்ப்பது, இல்லையென்றால், அடுத்த தேர்தலில் ஆளும்கட்சியின் மீதான எதிர்ப்பலையில் தங்களுக்குக் கிடைக்கப் போகும் வெற்றியை எதிர்பார்த்துக் காத்திருப்பது என்பதுதான் அது.

ஹொலாந்தின் வெற்றி அவரது செல்வாக்கால், மக்களின் ஆதரவால் கிடைத்ததல்ல. சர்கோஸி என்ற பெயரைக் கேட்ட மாத்திரத்தில் ஆத்திரம் கொண்ட மக்களின் வெறுப்பினால் கிடைத்த வெற்றி. அடுத்த ஐந்தாண்டுகள் காத்திருந்தால் ஒருவேளை மக்கள் மீண்டும் சர்கோஸியைத் தேர்ந்தெடுக்கக் கூடும். 'இன்றைய ஹீரோ, நாளைய ஜீரோ, இன்றைய ஜீரோ நாளைய ஹீரோ' என்பதுதான் தேர்தல் இலக்கணம் என்பதை பிரான்ஸும் இப்போது உறுதிப்படுத்தி இருக்கிறது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆறு வயதிலே அதிசயம்

அன்றுமாலை நான்கு மணி இருக்கும் முத்துவேல் மைதானத்தில் ஊடகங்களுக்கு இடையில் நட்பு ரீதியான கிரிக்கெட் போட்டி நடை பெற்றுக் கொண்டு இருந்தது. எல்லோரும் பரபரப்பாக இருந்தார்கள்.

ஊடக நண்பர் ஒருவரின் அழைப்பின் பேரில் நானும் அங்கு சென்றிருந்தேன். இடைவேளை நேரத்தில் எல்லோர் பார்வையும் அந்த சின்னஞ் சிறு சிறுவனின் பக்கம் திரும்பியது. நானும் பார்வையை அப்பக்கம் செலுத்தினேன் என்ன ஆச்சரியம் நட்சத்திர கிரிக்கெட் வீரர் போல் அவன் காட்சியளித்தான் எல்லோர் வாயிலும் அவன் பெயர்தான் இன்ரநெற்றில் viedo clip பார்த்தியாட அசத்தல் அடி என பேசிக் கொண்டார்கள். என்னதான் நடக்குது பார்ப்போம் அவனது பயிற்சியை கவனித்தேன் எனக்கு நம்பவே முடியவில்லை அப்படியே வியந்து போய் நின்றேன்.

அவனது பெயர் சண்முகநாதன் சாருஜன். புனித பெனடிக் கல்லூரியில் முதலாம் தரத்தில் கல்வி கற்கிறான்.

உங்களுக்கு பிடித்த விளையாட்டு வீரர் யார் என்றேன்? குமார் சங்கக்கார என்றான்.

தந்தையான சண்முகநாதனிடம் பேசியபோது

எனக்கு கிரிக்கெட் விளையாட்டில் மிகவும் ஆர்வம் எனினும் என்னால் ஒரு கிரிக்கெட் வீரராக வரமுடியவில்லை இந்த ஏக்கம் என்னுள் புதைந்து போனது ஆர்வம் மட்டும் குறைந்து போகவில்லை. எனது விருப்பத்தின் விளைநிலம் மகன் சாருஜன் தான். பத்து மாதக் குழந்தையாக இருக்கும் போதே அவன் விரும்பி எடுத்தது பந்தைத்தான். என்னிடம் விரும்பி கேட்பதெல்லாம் கிரிக்கெட் பொருட்கள் தான்

அப்போதே புரிந்து கொண்டேன். சாருஜன் வளர வளர அவனது கிரிக்கெட் ஆர்வமும் அதிகமாகியது. இரண்டு வயது இருக்கும் நாங்கள் குடும்பமாக கிறிக்கட் பார்க்கப் போயிருந்தோம். அப்போது இவனது கையில் bed உம் ball உம் தான் இருந்தது. விளையாட்டை உன்னிப்பாக பார்த்துக் கொண்டு இருந்தவன். திடிரென அழ ஆரம்பித்து விட்டான் என்ன என்று கேட்டதற்கு வீரர்கள் காலில் அணியும் pad தனக்கும் வேண்டும் அழுது புரண்டான் ஒருவாறாக ancher மட்டையை காலில் கட்டிய பின்பு தான் அழுகையை நிறுத்தினான்.

எனது மகனை பாடசாலைக்கு சேர்ப்பதற்கு பல முன்னணி பாடசாலைகளுக்கு விண்ணப்பித்திருந்தேன் எந்தப் பாடசாலைகளிலும் இடம் கிடைக்கவில்லை அப் போதுதான் S.S.C மைதானத்தில் இலங்கையில் இலங் கைக்கும் அவுஸ்ரேலியாவுக்கும் நடந்த 3ஆவது ரெஸ்ட் கிரிக்கெட் 16-9-2011 போட்டியில் பிரபல நட்சத்திர வீரர் குமார் சங்கக்கார தவற விடுகின்ற பந்துக்கு அதே மைதானத்தில் அருகாமையில் அதே முறையில் வீசப்படும் பந்துக்கு விளாசுகிறான் சாருஜன் அத்தருணத்தை பதிவு செய்து நேரடியாக onthe spot இல் இருவரையும் ஒரே திரையில் காண்பித்தார்கள் என்றால் பாருங்களேன்.

அப்போதுதான் சாருஜனின் திறமை புலப்பட்டது. வர்ணனையாளர்கள் லிட்டில் சங்கக்கார என்று ரொம் மோடி தனது டுவிட்ரரில் 5வயது வருங்கால நட்சத்திரம் எனவும் புகழ்ந்துள்ளார்கள். இவ்வாறு வெளிவர முதல் காரணம் பயிற்சியாளர் சுஜிவன்தான் அவரின் சிந்தனையின் விளைவுதான்.அதன் பிறகு என்ன எல்லோர் வாயிலும் சாருஜன் தான்.

உங்கள் மகன் பற்றிய கனவு?

ஒரு நாள் என்றாலும் எமது மகன் சாருஜன் இலங்கையின் கிரிக்கெட்





தேசிய அணியில் விளையாட வேண்டும் என்பதே எமது கனவும் ஆசையும் இலட்சியமும். அதற்காக தீவிரமாக போராடி வருகிறேன். அது ஒரு நாள் நிறைவேறும் அதுவரை எனது முயற்சி தொடரும்.

இதுவரை நாங்கள் பத்திரிகைகளில் சச்சின் டெண்டுல்கர் சிறுவயதில் (14) ஜோடியாக விளையாடி அதிக ran எடுத்த வீரர் என்று படித்திருக்கிறோம். இங்கே 6 வயதில் எங்கள் மண்ணின் முத்து சாருஜன். சாருஜனைப்போல் இன்னும் மின்னும் நட்சத்திரங்கள் இலைமறை காயாக இருக்கிறார்கள் அவர்களை ஊக்குவித்து உலகத்தரத்துக்கு உயர்த்துவோம். சந்தேகம் இருப்பின் www.ulagam360.com மற்றும் www.sharucricketlife.com மற்றும் www.youtube.com சென்று பார்வையிடலாம்.

**சந்திப்பு: பாம்பு கஜன்**






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிர்ச்சியூட்டுகிறது




**மாய** இந்தியர்கள் நம்பிக்கையில் 13ஆம் நெடும் ஆண்டுக் கணக்கு முடியும். இதையே உலகக் கணக்கே முடிந்து போகும் என்று பீதி கிளப்பினார்கள். தார்ச்சுகுவெரா கல்வெட்டில் 13.0.0.0.0 என்று குறிக்கப்பட்டு இருக்கிறதாம்.

13 என்றால் பலருக்கும் பயம். விக்கா என்கிற குட்டிச் சாத்தான்கள் 13 பேர் அடங்கிய கூட்டமாகத்தான் திரிவார்களாமஅமெரிக்க தேசியக் கொடியிலும் 7 சிகப்புப் பட்டைகள், 6 வெள்ளை இடைவெளிகள். மொத்தம் 13. ஆதி காலத்தில் கொடி மூலையில் வட்டவடிவில் இடம்பெற்ற நட்சத்திரங்களும் 13. பின்னர் அதன் எண்ணிக்கை மாநிலங்களுக்கு ஏற்ப 50 ஆக உயர்த்தப்பட்டது. போகட்டும்.

ஸ்பானிய மொழியில் த்ரெசே என்றால் 13. அமெரிக்காவில் "க்சைக்கானோ" எனும் மெக்சிகோ கொள்ளைக் கும்பலின் 13ஆம் ஆசாமியை இந்தச் சொல்லால் குறிக்கின்றனர்.

சௌராஷ்ட்ரிய சம்பிரதாயப்படி, ஃபர்வார்தீன் எனும் ஈரானிய ஆண்டின் 13ஆம் நாள் கறுப்பு தினம். தீமைகளின் ஆதிக்க நாள். அதனை "செஸடா பே-தார்" என்று வெறுத்து ஒதுக்குகிறார்கள். செஸ்டா என்றால் 13. அது வேண்டாமே என்பது பொருள். இன்றைக்கும் இஸ்லாமிய மக்கள் அந்த 13ஆம் நாளில் நகரங்களைத் தவிர்த்துக் கிராமங்களில் உலாவும் வழக்கம் உள்ளது.

பையன்களுக்குத் தடுமாறும் விடலைப் பருவம் 13 ஆம் வயதில் தொடங்குமாம். அதனாலேயே ஆங்கிலத்தில் "டீன்" என்ற ஒட்டுச் சொல் "தேர்ட்டீன்" ஆகிய 13இல் இருந்து ஆரம்பிக்கும்.

கத்தோலிக்க வழக்கப்படி பதுவா நகரின் புனித அந்தோனி வழிபாடுகள் 13 செவ்வாய்க் கிழமைகள் (கால் ஆண்டுக் காலம்) நடைபெறும். ஒவ்வோராண்டும் ஜுன் 13 அன்று புனித அந்தோனியார விழா நடைபெறும்

பஞ்சாபி மற்றும் இந்தி மொழிகளில் "தேராஹ்" என்றால் பதின்மூன்று என்றும் பொருள் உண்டு. காலி இனத்தின் முக்கிய வைகாசிப் பண்டிகை ஏப்ரல் 13 அன்று சீக்கியர்களால் கொண்டாடப்படுகிறது.

விண்வெளி விபத்திலும் 13இன் திருவிளையாடல் உண்டு 1970 ஏப்ரல் 11 அன்று 13 : 13 மணிக்குச் செலுத்தப் பெற்றது அப்போலோ -13. அந்த விண்கலனில் ஏப்ரல் 13 அன்று ஆக்சிஜன் வாயுக் கலன் வெடித்து விபத்து நேர்ந்தது. நல்லவேளை, விண்வெளி வீரர்கள் பிழைத்தார்கள்.

13 என்றால் மேனாட்டவர்க்கு அலர்ஜி. இதற்கு ஒரு விசேஷக் காரணமும் உண்டு. யேசு நாதர் உடன் 12 சீடர்கள். அவர் முகாமில் 13ஆம் பேர்வழி யூதாஸ் இஸ்காரியத், யேசுவைக் காட்டிக் கொடுத்தான். தானும் தூக்கில் தொங்கித் தற்கொலை செய்து கொண்டான்.

ஏதாயினும், கிறித்தவர்க்கு பதின்மூன்றும் வெள்ளியும் தீமையின் குறியீடுகள். ஜெருசலம் நகரில் சாலமன் ஆலயத்தின் செஞ்சிலுவைப் படைவீரர்கள் போரில் அவர்தம் புனித பூமியை இழந்த நிலையில் மக்களிடையே அதிருப்தி உண்டாயிற்று.

அறிவியல் ரீதியில் பார்த்தால், பூமி சூரியனைச் சுற்றி வரும்போது வானில் பல்வேறு விண்மீன் தொகுதிகளின் ஊடாக நகர்ந்து செல்வதுபோல் தோன்றும். அந்தச் சூரிய வீதியை 12 பெரும்பிரிவுகள் ஆகப் பகுத்து வைத்து இருக்கிறோம். ஆதி ஈரானியர் ஒவ்வொன்றையும் "ராசி" என்றே வழங்கினர். "ரா" என்றால் சூரியக் கடவுள். மெசபடோமியக் கலாசாரத்தில் "சின்" என்றால் நிலா தேவன்.

ஆண்டுக் கணக்கு கிறிஸ்துவிற்கு முன், பின் (கி.மு., கி.பி.,) என்றோ, திருவள்ளுவர்க்கு முன், பின் (தி.மு., தி.பி) என்றோ அமையட்டும். ஏதானாலும் ஒரு ஆண்டில் 13 பௌர்ணமிகள் தோன்றுவது இல்லை. மாதங்களும் 13 இல்லை. ராசிகளும் பன்னிரண்டே. 13 ராசி இல்லை. இதுவே ""13 ராசியில்லை"" என்று ஆகிவிட்டது.

அடுத்த ஆண்டு 2013 இதில் 13 வருகின்றது என்ற பீதி உலகை இன்று ஆட்டிப்படைகின்றது என்ன நடக்கும் என்பதை பொறுத்திருந்து பார்ப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# டெஸ்ட் சமர்



பாகிஸ்தான் - இலங்கை அணிகளுக்கிடையில் இலங்கையில் நடைபெற்றுவரும் கிரிக்கெட் தொடரில், இருபது-20 போட்டிகள் முடிந்து, தற்போது ஒருநாள் போட்டிகளும் முடியும் கட்டத்தை எட்டியுள்ள நிலையில், எதிர்வரும் 22ஆம் திகதி இரு அணிகளுக்குமிடையிலான 3 போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடர் ஆரம்பமாகவுள்ளது.

முந்தைய போட்டிகளைவிட டெஸ்ட் தொடரை எந்த அணி வெல்லப்போகிறது என்பதுதான் தற்போதைய எதிர்பார்ப்பாக உள்ளது.

சொந்த மண்ணில் விளையாடுவதால் இலங்கை அணிக்குப் பலமாக இருந்தாலும், பாகிஸ்தான் அணி பலமாகவே உள்ளது. எனவே அந்த அணியை எதிர்கொள்வது இலங்கைக்குச் சவாலாகவே அமையும்.

இலங்கைக்கு உள்ள ரசிகர்களைப் போலவே பாகிஸ்தானுக்கும் இங்கே ரசிகர்கள் நிறையவே உள்ளனர்.

இரு அணிகளுக்குமிடையிலான முதலாவது டெஸ்ட் போட்டி எதிர்வரும் 22ஆம் திகதி காலி சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் ஆரம்பமாகிறது.

இரண்டாவது போட்டி எதிர்வரும் 30ஆம் திகதி கொழும்பு சிங்கள விளையாட்டு மைதானத்திலும், மூன்றாவது போட்டி அடுத்த மாதம் 8ஆம் திகதி பல்லேகல சர்வதேச கிரிக்கெட் மைதானத்திலும் ஆரம்பமாகவுள்ளன.

இத்தொடரை முன்னிட்டு இரு அணிகளுக்குமிடையில் இதுவரை நடைபெற்ற டெஸ்ட் தொடர்கள் குறித்த அட்டவணை கீழே தரப்பட்டுள்ளது.

| ஆண்டு | இடம் | மொத்தம் | பா.வெ. | இ.வெ. | சமனி |
|---|---|---|---|---|---|
| 1981–82 | பாகிஸ்தான் | 3 | 2 | – | 1 |
| 1985–86 | பாகிஸ்தான் | 3 | 2 | – | 1 |
| 1985–86 | இலங்கை | 3 | 1 | 1 | 1 |
| 1991–92 | பாகிஸ்தான் | 3 | 1 | – | 2 |
| 1994 | இலங்கை | 2 | 2 | – | – |
| 1995–96 | பாகிஸ்தான் | 3 | 1 | 2 | – |
| 1996–97 | இலங்கை | 2 | – | – | 2 |
| 1998–99 | ஆசிய சம்பியன்சிப் | 2 | 1 | – | 1 |
| 1999–2000 | பாகிஸ்தான் | 3 | 1 | 2 | – |
| 2000–01 | இலங்கை | 3 | 2 | – | 1 |
| 2001–02 | ஆசிய சம்பியன்சிப் | 1 | – | 1 | – |
| 2004–05 | பாகிஸ்தான் | 2 | 1 | 1 | – |
| 2005–06 | இலங்கை | 2 | 1 | – | 1 |
| 2008–09 | பாகிஸ்தான் | 2 | – | – | 2 |
| 2009 | இலங்கை | 3 | – | 2 | 1 |
| 2011–12 | ஐ.அ.இ. | 3 | 1 | – | 2 |
| மொத்தம் | | 40 | 16 | 9 | 15 |









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்களும் செய்துபார்க்கலாம்













# சாதனைக்கு தயாராகும் அனுஹரிஸ்



**தி**னமகுடி சஞ்சிகையின் முதல் பிரதி வெளியாகி சில தினங்களில் எமக்கு பல மடல்கள் வந்தன

அவற்றில் பல வாழ்த்து மடல்களும் சில வியப்புகுள்ளாகும் மடல்கள் இந்த வியப்பை தந்த மடல்கள் குறித்து நாம் நேரில் சென்று சந்தித்தபோது...

323\8 அளுத்மாவத்தை, கொழும்பு-15 இல் இச்சிறுவனின் இல்லம் அமைந்திருக்கிறது.

அவனது பெயர் வி.அனுஹரிஸ் ஆறம் தரத்தில் விவேகானந்தா கல்லூரியில் கல்வி பயில்கின்றான்.


அது மட்டுமல்லாமல் மின்சாரவியலில் அதிக ஆர்வம் உடையவனாக உள்ளான் இவனது ஆர்வத்தினால் வீட்டில் இருந்தும் சூழலிலிருந்து வீசப்படும் கழிவுப் பொருட்களை வைத்து பல வகையான கண்டுபிடிப் புகளை செய்து வருகிறான். அவற்றில் சில நைட் பல்ப் (night-bulb) மின்விசிறி (fan) ரேடியோ (radio) போன் ரிப்பேரிங் (phone repair) யாருடைய உதவி யுமின்றி தனியே செய்கிறான்.

உங்களது அடுத்த முயற்சி என்ன என வினவியபோது

ரெஸ்ரர் வைத்து மின்சாரம் இருக்கிறதா என்று பார்க்கிறார்கள்.

அந்த ரெஸ்ரரை வைத்து பற்றியில் உள்ள power ஐ அறிய முயற்சி செய்து வருகிறேன். இன்னும் பல விடயங்கள் செய்ய இருக்கிறேன்.

எனக்கு என் சக பாடசாலை மாணவர்களும் தாய் தந்தையும் ஆசிரியர்களும் ஊக்கம் தருகின்றனர் என்றான். இச் சிறுவனை வாசகர் மத்தியில் அறிமுகப்படுத்துவதில் தினமகுடி மகிழ்வடைகிறது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாகனக்கனவை கலைகிறது

**வா**கனங்களை மக்கள் பயன்படுத்தவது பொது வாக வசதியாகப் பயணிப்பதற்கும் விரைந்து சென்று தமது காரியங்களை முடித்துக் கொள்வதற்கும் ஆகும். ஆனால் இலங்கை போன்ற ஆசியநாடுகளில் வாக னங்களை ஒருவர் வைத்திருப்பதற்கு வேறோரு காரணமும் இருக்கிறது. அது ஒருவரின் சமூக அந்தஸ்த்தின் அளவு கோலாகவும் கணிக்கப்படுகிறது.

இவ்வாறான நிலையில் வாகனம் ஒன்றை வாங்க வேண்டும் என்ற கனவை சுமந்திருந்தவர்களின் கனவுகளை கலைத்து - எதிர்பார்ப்புகளை சிதைத்துள்ளது சமீபத்தில் அரசு அறிவித்துள்ள வாகனங்கள் மற்றும் உதிரிப்பாகங் களுக்கான இறக்குமதித் தீர்வை மற்றும் சுங்கத் தீர்வை களுக்கான விலை அதிகரிப்பு ஆகும்.

இந்த அதிகரிப்பு ஏற்கனவே வாகனம் வாங்க வேண்டும் என்ற எண்ணத்திலிருந்தவர்களை இப்போதைக்கு இந்த ஆசை வேண்டாம் முடிவுக்கு வரச்செய்துள்ளது. கடந்த மார்ச் மாதம் 31 ஆம் திகதி இடம் பெற்ற இந்த விலை அதிகரிப்புக்கு அரச தரப்பில் சொல்லப்பட்ட விளக்கம், இறக்குமதி செலவினங்களை குறைத்தல், வர்த்தகப் பற் றாக்குறையை இல்லாதொழித்தல், இதன்மூலம் சமநிலை வர்த்தகத்தை பேணுதல் என்பதாகும்.

கடந்த 2010 ஆம் ஆண்டு நடுப்பகுதியில் அரசு, வாகனங் களுக்கான இறக்குமதி தீர்வையை 50 வீதத்தால் குறைத் தது. பின்னர் சில வாக னங்களுக்கான தீர்வையை உயர்த்தியது. இந்த நிலைமை வாகனங்களின் இறக்குமதியையும், வருவாயையும் மிக வேகமாக அதிகரிக்கச் செய்தன.

வாகன இறக்குமதி 147 வீதத்தால் அதிகரித்து எனவும் 2010 ஆம் ஆண்டில் 469,207 வாகனங்களும் 2011 ஆம் ஆண்டு 523.963 வாகனங்களும் இறக்குமதி செய்யப்பட்டன எனவும் தரவுகள் தெரிவிக்கின்றன.

மேற்படி காலப்பகுதியில் அரசுக்கு 353.6 வீதத்தால் வருமானம் அதிகரித்தது என இலங்கை வர்த்தக சம்மேளன அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

இவ்வளவு அதிகளவான வாகனங்கள் இறக்குமதி செய்யப்பட்டமையானது பல்வேறு இடையூறுகளையும் ஏற்படுத்தியுள்ளது. அதாவது போக்குவரத்து நெரிசல், விபத்துஅதிகரிப்பு, போக்குவரத்து சேவைக்கான பாதுகாப்பு ஏற்பாடு போன்றன தொடர்பில் இவை ஏற்பட்டுள்ளன.

இந்நிலையில் தற்போது அரசு அதிகரித்துள்ள தீர்வை எந்தெந்த வாகனங்களின் மீது விதிக்கப்பட்டுள்னது - எந்தெந்த வாகனங்களுக்கு விலக்கப்பட்டுள்ளது என்பதை பார்ப்போம்.

விவசாயத்துக்கு உதவும் டிராக்டர்கள், போக்குவரத் துக்கு உதவும் பஸ், லொறி, டிரக்குகள் போன்றனவற்றுக்கு இவை நீக்கப்பட்டுள்ளன.

ஏனைய அனைத்து வாகனங்களுக்கும் அவற்றின் உதிரிப்பாகங்களின் இறக்குமதிக்கும் தீர்வை மற்றும் சுங்க வரிகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. 2500 cc w.p கண்டிஷன் வான்களும் இதற்குள் அடக்கம்.

இதேபோன்று, மோட்டார்சைக்கிள் மற்றும் ஓட்டோ வாகனங்களின் விலையும் 51 வீதம்முதல் 61 வீதம் வரை அதிகரிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் ஏற்கனவே விதிக்கப்பட்டுவரும் சேர்வரி (vat) உட்பட ஏனைய வரிகள் (pal, nbt, edb) அனைத்தும் விதிக்கப்படும் நிலையும் உள்ளது.

ஜி.எஸ்.பி போன்று தற்போது நடைமுறைப்படுத்தப்படும் G.S.T.P (Globalised system of Trade preference) திட்டத்தின் கீழ் இத்திட்டத்தின் உறுப்புரிமை நாடுகளான தாய்லாந்து, கொரியக்குடியரசு, இந்தியா, இந்தோனேஷியா, மலேஷியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் வாகனங்களுக்கு 15 வீதம் முதல்30 வரையிலான சுங்கத்தீர்வை குறைக்கப்பட்டுள்ளது.

எனினும்,பொதுவான வாகனச்சந்தையில் ஏற்பட்டுள்ள விலை ஏற்றத்தை இந்தச்சலுகை அவ்வளவாகக் குறைத்து விடாது என இத்துறையில் ஈடுபாடு கொண்டுள்ள வர்த்தகர் கள் தெரிவிக்கின்றனர்.

மொத்தத்தில் பெற்றோலியத்துக்கு செலவிடும் அன் னியச் செலாவணியைக் குறைப்பதற்கு அரசால் மேற்கொள் ளப்படும் இந்த ஏற்பாடு பலரின் வாகனக் கனவை கலைத் துள்ளது என்பதே உண்மை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விம்பிள்டன்-2012

## ஜூன் 25 தொடக்கம் ஜூலை 8 வரை டென்னிஸ் கொண்டாட்டம்



ஆண்டுதோறும் ஆஸ்ரேலியன் ஓப்பின், பிரெஞ்ச் ஓப்பின், விம்பிள்டன், அமெரிக்க ஓப்பின் ஆகிய கிராண்ட்ஸ்லாம் அந்தஸ்துப்பெற்ற டென்னிஸ் தொடர்கள் நடைபெற்றுவருகின்றன.

இவற்றுள், வரலாற்றின் மிகப் பழைமையான கிராண்ட்ஸ்லாம் அந்தஸ்துப் பெற்ற போட்டியாக விம்பிள்டன் டென்னிஸ் தொடர் விளங்குகிறது. டென்னிஸ் தொடர்களில் அதிக மரியாதைக்குரியதான இத்தொடர், ஆண்டுதோறும் ஜூன் மாத இறுதியில் தொடங்கி ஜூலையில் முடிவடைகிறது. ஆண்டின் மூன்றாவது கிராண்ட்ஸ்லாம் போட்டித் தொடராகவும் இது விளங்குகிறது.

விம்பிள்டன் டென்னிஸ் தொடர் 1877இல் தொடங்கியது. அப்போது ஆண்களுக்கான ஒற்றையர் போட்டி மாத்திரமே நடத்தப்பட்டது. பின்னர் 1884இல் பெண்களுக்கான ஒற்றையர் போட்டி அறிமுகமானது. தொடர்ந்து இரட்டையர், கலப்பு இரட்டையர் போட்டிகளும் நடைபெற்றன.


முதல் உலகப் போர் (1915-1918), இரண்டாம் உலகப் போர் (1940-45) நடந்த காலகட்டத்தில் போட்டிகள் நடக்கவில்லை. தற்போது 126ஆவது ஆண்டாக நடைபெறும் இத்தொடர், எதிர்வரும் 25ஆம் திகதி தொடங்கி, ஜூலை 8ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இத்தொடரில் முன்னணி நட்சத்திரங்கள் பல எதிர்பார்ப்புகளுக்கு மத்தியில் களமிறங்குகின்றன.

அதன்படி கடந்த ஆண்டு ஆண்கள் ஒற்றையர் விம்பிள்டன் சம்பியனும் முதல் நிலை வீரருமான நோவாக் டிகோவிக்கும், தொடர்ந்து அடுத்தடுத்த இடங்களில் உள்ள பெடரர், நடால், அன்டிமுர்ரே ஆகியோரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளனர்.

அதேபோல பெண்கள் ஒற்றையர் பிரிவில் கடந்த விம்பிள்டன் சம்பியனான செக்குடியரசின் பெட்ரா கிவிரோவா நடப்புச் சம்பியனாகக் களமிறங்குகின்றார். இவர் தவிர முதல் நிலை வீராங்கனையான விக்டோரியா அஸரென்கா, மரியா ஷரபோவா, அக்னிஸ்கா ரட்வன்ஸ்கா, சமந்தா ஸ்டோஸர், வில்லியம்ஸ் சகோதரிகள், நா லீ, மரி யோன் பட்டொலி மற்றும் கரோலின் வொஸ்னியாக்கி என ஒரு பட்டாளமே களமிறங்குகிறது.

எனவே, இத்தொடர் ஆரம்பமாகி முடியும்வரை டென்னிஸ் ரசிகர்களுக்குக் கொண்டாட்டம்தான்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



### மேடம்

இந்த மாதத்தில் எதைத் தொட்டாலும் ஏதாவது தடை தோன்றும். ஆனால் சற்றுப் பொறுமையாகத் தொடர்ந்து முயற்சி செய்தால் அந்தக் காரியத்தை வெற்றிகரமாகச் செய்து முடிக்கலாம். அலுவல் சங்கடங்கள், அசௌகரியப் பிரச்சினைகள் தொடர்ந்தாலும் எதிர்பாராமல் கிடைக்கும் தகுந்த உதவிகள் உங்களுக்கு ஆறுதல் தரும். சில பாதிப்புகள் கடுமையாகத் தாக்குவது போல் பாய்ந்து வரும். ஆனால் உங்களை இலேசாக உரசிவிட்டுப் பறந்தோடி விடும்.



### இடபம்

இம்மாதத்தில்மனதில் தன்னம்பிக்கையும் தைரியமும் அதிகமாகும். புத்தித் தெளிவுடன் பல நல்ல முடிவுகளை எடுப்பீர்கள். உங்களுடைய உழைப்பை உரிய வகையில் செலுத்திப் பல காரியங்களை வெற்றிகரமாகச் செய்து முடித்து ஆதாயம் தேடுவீர்கள். எனினும் சிலருக்கு கொடுக்கல் வாங்கல் தொடர்பில் தடை தாமதங்கள் காணப்படுகின்றன.



### மிதுனம்

இம்மாதத்தில் தொழில், வியாபாரத்தில் முன்னேற்றமான போக்கு காணப்பட்டாலும் எதிர்பார்க்கும் லாபம் கிட்டாது. உத்தியோகம் பார்ப்பவர்கள் கடினமாக உழைத்தாலும் மேலதிகாரியிடம் நல்ல பெயர் வாங்க முடியாது. கலைஞர்களுக்கு புதிய தொடர்புகளால் வருமானம் பெருகும். ஆனால் அதைவிட அதிகமாகச் செலவு ஏற்படும்.



### கடகம்

இம்மாதத்தில் பொறுப்புகள், கடமைகள், அலுவல்கள் ஆகியவை அதிகரித்து பெருஞ்சுமையாகி உங்களைத் திணற வைக்கும். வருமானத்திற்கு ஆதாரமான காரியங்கள் அனைத்திலும் சிரமங்கள் அதிகமாக காணப்படும். ஊக்கமும் உடல்நலமும் அவ்வப்போது பின்னடையும். எந்த வேலையாக இருந்தாலும் தாமதமாகத் தான் செய்து முடிக்க முடியும்.



### சிம்மம்

இந்த மாதத்தில் வேதனைகளும் சோதனைகளும் நீங்கிச் சாதனை பல புரிந்து புகழ் பெறுவீர்கள். வழக்கு விவகாரங்களில் சாதகமான போக்கு காணப்படும். வம்புச் சண்டைக்கு வருபவர்கள் முறியடிக்கப்படுவார்கள். தாராளமாகத்தான் தருமங்கள் கைங்கரியங்கள் செய்வீர்கள். தைரியமும் தெம்பும் அதிகமாகும்.



### கன்னி

இம்மாதத்தில் உடல் ஆரோக்கியத்தில் உள்ள குறைபாடுகள் நீங்கும். முன்னேற்றத்திற்கு தடையாக இருந்த முட்டுக்கட்டை விலகிக் கொள்ளும். சுற்று வட்டாரத்தில் உங்கள் முக்கியத்துவம் உணரப்படும். நேற்று வரை உங்களைப் பார்த்தும் பார்க்காதது போல் சென்றவர்கள் இன்று நெருங்கி வந்து நட்பு பாராட்டுவார்கள். பிரபலமாக விளங்கும் மனிதர்களில் சிலரும் தேடி வந்து உங்களிடம் நட்பு வைத்துக் கொள்வார்கள்.







### துலாம்

இம்மாதத்தில் மனைவியின் ஆரோக்கியம் அடிக்கடி பாதிக்கப்படும். கணவன், மனைவிக்குள் கருத்து வேற்றுமை தலை தூக்கும். வீட்டு நிர்வாகம் தொடர்பாக வாக்கு வாதம் உண்டாகும். திருமணப் பேச்சு வார்த்தைகள் இழுத்துக்கொண்டே போகும். அதிகப்படியான உழைப்பு காரணமாக கணவன் அல்லது மனைவி அடிக்கடி சோர்ந்து போகக் கூடும். கணவன், மனைவிக்கிடையே பிணக்கு ஏற்படும்



### விருச்சிகம்

இம்மாதத்தில் நீங்கள் மனைவி மக்களின் வசதியை பெருக்க முயற்சி செய்வீர்கள். உற்றார் உறவினர் மத்தியில் உங்கள் செல்வாக்கையும், மதிப்பையும் உயர்த்திக் கொள்ள முயற்சி செய்வீர்கள். ஆனால் எதுவுமே நீங்கள் எதிர்பார்க்கும் அளவுக்கு நடக்காது. இருப்பினும் சாமர்த்தியமாக சமாளித்து நினைத்ததை சாதிப்பீர்கள்.



### தனுசு

இம்மாதத்தில் உங்களுடைய உழைப்பு முழுமையும் உங்களுக்கு பெரும் இலாபத்தை தேடிக் கொடுக்கும். வேலை தேடிக் கொண்டிருப்பவர்களுக்கு இப்போது நல்ல வேலை கிடைக்கும். புதிதாக தொழில் அல்லது வியாபாரம் தொடங்க நினைப்பவர்களுக்கு இப்போது அதற்கான வாய்ப்பு உருவாகும்..தேவையற்ற வாக்குறுதிகளை தவிர்க்கவும்



### மகரம்

இம்மாதத்தில் உங்களுக்குத் தினமும் ஒரு தண்டச் செலவு ஏற்படும். அதே சமயம் வசதி வாய்ப்புகளைப் பெருக்கிக் கொள்ளத் தாராளமாகச் செலவு செய்ய நினைப்பீர்கள். ஆனால் முடியாது. அவசியச் செலவுக்கு என்று எடுத்து வைக்கும் பணம் அநாவசியமாகக் கரைந்து போகும். நீண்ட தூரம் பயணம் அல்லது வெளிநாட்டுப் பயணத்திற்குத் திட்டம் போடுவீர்கள். ஆனால் அது அவ்வளவு சுலபமாக நிறைவேறாது



### கும்பம்

இம்மாதத்தில் மனதில் தைரியம் குறையும். அதனால் துணிச்சலாகச் செயல்பட தயங்குவீர்கள். மனதில் நம்பிக்கை நீங்கி அவநம்பிக்கை குடி கொள்ளும். எந்தக் காரியத்தைச் செய்யத் தொடங்கினாலும் அதை வெற்றிகரமாகச் செய்து முடிக்க முடியுமா என்ற சந்தேகம் ஏற்படும். அந்தச் சந்தேகமே உங்களுக்குத் தோல்வியைத் தேடிக் கொடுத்து விடும். எனினும் சிறுசிறு வெற்றிகளை அடைவதில் சிரமம் இருக்காது



### மீனம்

இம்மாதத்தைப் பொறுத்தவரை உங்களுடைய பொருளாதார நிலை திருப்திகரமாக இராது. உங்களுக்கு வரவேண்டிய பணம் மொத்தமாக வராது. கொடுக்கல், வாங்கலில் குளறுபடிகள் குதர்க்கம் போன்றவை காணப்படும். வருமானம் தொடர்பான செலவுகளில் தடைகளும் தாமதங்களும் ஏற்படும். இம்மாதத்தைப் பொறுத்தவரை பெரிய திட்டங்களை செயல்படுத்துவது என்பது ஆகாத காரியமாக இருக்கும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org
14.06.2012 14.06.2012

# ரோஜா இதழ்

ரோஜா பூக்கள் காதலுக்கு மட்டும் அடையாளமான மலரல்ல. இது மருத்துவ குணம் நிறைந்தது. ரோஜா பூவில் இருந்து தயாரிக-கப்படும் "குல்கந்து" இதயத்திற்கு பலம் தரும் மருந்தாகவும், ஆண்மை பெருக்கியாகவும் செயல்படுவதாக ஆயுர்வேத மருத்துவர்கள் தெரிவித்-துள்ளனர்.

ரோஜா இதழ்களில் இருந்து தயாரிக்கப்படும் "குல்கந்து" நாட்டு மருந்து கடைகளில் கிடைக்கிறது. வீட்டிலேயே கலப்படமில்லாமல் நாம் தயாரிக்கலாம்.

## குல்கந்து செய்முறை

நல்ல தரமான சிவந்த நிறமு-டைய நன்கு பூத்த பூக்களிலிருந்து இதழ்களை ஆய்ந்து கொள்ளவும். இதழ்களை நன்கு கழுவி சுத்தம் செய்து ஈரம் போக துடைத்து நிழலில் உலர்த்தி வைத்துக் கொள்ளவும். சேகரித்த இதழ்களின் எடையைப் போல மூன்று மடங்கு கற்கண்டை எடுத்துக் கொள்ளவும். ரோஜா இதழ்களையும் கற்கண்டையும் கொஞ்சம் கொஞ்சமாக சேர்த்து இடித்துக் கொள்ளவும். ஜாம் போல வரும் வரை இடிக்கவும். இதனை ஒரு வாயகன்ற கண்ணாடி ஜாடியில் போடவும்.

இந்த ஜாம் அளவுக்கு மூன்றில் ஒரு பங்கு சுத்தமான தேனை



விட்டு நன்றாக கிளறவும். இத்துடன் வெள்ளரி விதை,கசகசா சேர்க்கவும். குல்கந்து தயார். ஒவ்வொரு தடவையும் உபயோகிக்கு முன் நன்றாக கிளறவும்.

## ஜீரணக் கோளாறு நீங்கும்

குல்கந்து வயிறு கோளாறுகளை நீக்கும். உடலின் பித்த அளவை சீராக்குகிறது. ஜீரண சக்தியை அதிகரித்து, பித்த பிரட்டலை குறைக்கும். அதிக அமில சுரப்பை குறைக்கும். அல்சர்களுக்கு மருந்தாகும். மலமிளக்கியாக செயல்பட்டாலும், குல்கந்து மலச்சிக்கலுக்கும் நல்லது.

## ஆண்மை பெருக்கி

குல்கந்து ஆண்மை பெருக்கி. உடலுக்கு வலிமை ஊட்டும். இதன் இதழ்களில் உள்ள எண்ணை ஆண்மை வலிமையை அதிகரிப்பதாக கருதப்படுகிறது. எனவே தான் காதலர்கள் மற்றவர்களை விட, ரோஜாவை பயன்படுத்துகின்றனர் என்று கூறப்படுகிறது பெண்களுக்கு மாதவிடாய் காலத்தில் ஏற்படும் வலிகளை குறைக்கிறது. வெள்ளைப் போக்கை கட்டுப்படுத்தகிறது.

## இதயத்திற்கு ஏற்றது

ரோஜா இதயத்திற்கு நல்லது. எனவே குல்கந்து இதய நோயுள்ளவர்களுக்கு நல்ல இதமான மருந்தாக செயல்படுகிறது.


இது மன அழுத்தத்தை போக்குகிறது. இரவில் தூக்கம் வராமல் தவிப்பவர்கள் காய்ச்சி ஆறவைத்த பாலில் அரை ஸ்பூன் குல்கந்து சேர்த்து சாப்பிடலாம் நன்றாக உறக்கம் வரும். இது முகப்பரு,உடல் நாற்றம் இவற்றை குறைக்கும்.

குல்கந்தை சிறுவர்கள் 1/2 தேக்கரண்டியும் பெரியவர்கள் ஒரு தேக்கரண்டியும்; தினமும் காலை இரவு உறங்கும் முன்பும் சாப்பிட்டு வரலாம். ஆரோக்கியத்திற்கு ஏற்றது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# எதற்கு நீ சலித்தாய் மனமே

துறவு என்பது பெருமளவுக்கு இந்தியச் சமயங்களுக்கு உரியது!

துறவு என்பது உடைமைத் துறவு மற்றும் காமநீக்கம்!

பற்று நீக்கம் என்பது துயர நீக்கம்! துயரம் என்பது உடைமை சார்ந்தும், காமம் சார்ந்தும் வருவதால், துயரத்திலிருந்து முற்றாக விடுபட விரும்புபவர்கள் இவை இரண்டிலிருந்தும் முற்றாக விடுபட்டு விடுவார்கள்!


பற்றில் உழல்பவர்களைப் பற்றற்ற துறவிகளே தூக்கி நிறுத்த முடியும் என்பதால், துறவிகளுக்கு இலக்கணம் வகுக்கின்ற பணியைப் புத்தன் செய்தான்!

ஒரே வீட்டில் மூன்று நாட்களுக்கு மேல் பிச்சை கொள்ள வேண்டாம் என்றான் புத்தன்! அது அவ் வீட்டாரோடு தொடர்பும், அதன் வழியாகப் பற்றும் வளரக் காரணமாகுமாம்!

ஒரே மரத்தடியில் மூன்று நாட்களுக்கு மேல் படுத்துறங்க வேண்டாம் என்றும் சொல்கிறான். வேறொருவன் அங்கு படுத்துறங்க நேரிட்டால், அவனிடம், ""எழுந்திரு இந்த இடம் என்னுடையது"" என்று மல்லுக்கு நிற்க நேரிடும்.

எல்லா-வற்றையும் துறந்து விட்டு வந்து, கேவலம் இந்த மரத் தடி இடத்தை உரிமை பாராட்டுகின்ற அசிங்கங்-கள் நேரி டும்! மனத்தின் நீர்மை இப்படிப்பட்டது தான் என்பதால், "கருத்தோடிருங்கள், கருத்தோடிருங்கள்" என்று சொல்லுவான் புத்தன்!

அரசனாக இருந்து துறவியாக மாறிய இன்னொருவன் பத்ரகிரி. ஒரு கோயிலின் மேற்கு வாயிலில் பிச்சையைப் பெறுவதற்கு ஓர் ஓட்டினை வைத்திருந்ததற்காகவும், தன்னை ஒட்டிக் கொண்ட நாயை விரட்ட மனம் ஒப்பாது அதை வளர்த்து வந்ததற்காகவும், பத்ரகிரி ஒரு சம்சாரி" என்று அந்தக் கோயிலின் மேற்கு வாயிலில் இருந்த பட்டினத்தார் கேலி செய்தாராம்! காரணம் ஓர் ஓடு கூட ஓர் உடைமைப் பொருளாகும் என்றெண்ணிப் பட்டினத்தார் கைகளைச் சேர்த்தே பிச்சை ஏற்று உண்டவராம்!



உடை கோவணம் உண்டு
உறங்கப் புறந்திண்ணை உண்டு
பசி வந்தால் உணவிட வீதி க்கு
நல்ல மாதர்கள் உண்டு இந்த
மேதினியில்! ஏதுக்கு நீ சலித்தாய்
மனமே என்று மனத்தினைச் சவுக்கால் அடித்து ஒழுங்கு செய்யும் இயல்பினர் பட்டினத்தார்!

காவி என்பது துறவின் அடையா ளம் அதை அதற்குத் தகுதியில்லா-தவன் அணியக் கூடாது! பசு மேயப் போவது புல்லைத்தான் அதற்கு எதற்குப் புலியின் தோலாலான போர்-வை? என்று கேட்பான் அறிஞர்க்கெல்லாம் அறி ஞான வள்ளுவன்! "பெற்றம் புலியின் தோல் போர்த்து மேய்ந்தற்று".

ஒரு காலத்தில் பதவிகள் ஏலம் விடப்பட்டது போல், ஆதீனகர்த்தர் பதவிகளும் இப்போது ஏலம் விடப்படுகின்றன.

பழைய ஆதீனகர்த்தருக்கு ஐந்து கோடி ரொக்கம் தங்கச் சிம்மாசனம் தங்கச் செங்கோல் - அடுத்தடுத்த தவணைகளில் இன்னும் என்னென்ன வழங்கப்படுமோ?

இன்றைய ஆதீனத்திற்கு உதவியாளர்களெல்லாம் பெண்கள்தாம்! இன்ன புடவைக் கடையை இன்ன நடிகை திறந்து வைத்தார் என்று பெருமை பேசப்படுவதுபோல, இன்ன ஆதீனம் பதவி ஏற்றுக் கொண்டபோது இன்ன நடிகை முன்னிலை வகித்தார் என்பதும் பெருமையாகப் பேசப்படுகிறதே இது காலக் கொடுமை!

அரசியல்வாதிகள் மீது குற்ற வழக்குகள் பெருகப் பெருக "இவ்வளவுதானே" என்று அவர்கள் வெட்கத்தை உதிர்த்து விடுவது போல, ஆதீனகர்த்தர்களும் சொரணை இல்லாமல் போய் விடுவார்கள் போலிருக்கிறது!

தமிழனுக்குத் தனியான நிலம் உண்டு தனியான மொழி உண்டு தனியான பண்பாடு உண்டு. தனியான சமயங்கள் உண்டு தனியான மெய்யியல் கொள்கைகளும் உண்டு.

ஆனால், இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வீரசாவர்க்கார் காலம் தொட்டுத் தமிழர்களெல்லாம் இந்துக்களாக ஆக்கப்பட்டு விட்டார்கள். அப்படி ஒரு பொதுமை வழக்கு உருவாக்கப்பட்டு விட்டது. இந்துக்களின் மெய்யியல் நூலாகப் பகவத் கீதை ஆக்கப்பட்டது!

தமிழனின் சமய அடையாள இழப்புக் குறித்து எந்தச் சைவ, வைணவ மடங்களாவது போராடியதுண்டா? எதற்கு ஆயிரம் வேலி நிலம்? எதற்குத் தங்கச் செங்கோல்? தமிழனின் சமயங்கள் சைவம், வைணவம், முருக வழிபாடு, இயற்கை வழிபாடு, மூதாதையர் வழிபாடு என்றிவைதாம். மூதாதையரைத் "தென்புலத்தார்" என்பான் அறிவுப் பேராசான் வள்ளுவன்!

பொத்தமும், சமணமும் துறவுதான் பரிநிருவாணத்திற்குரிய வழி என்று வற்புறுத்தியபோது, தமிழ் இளைஞர்கள் இளந்துறவிகளானார்கள்! வள்ளலார் போன்றவர்களே சமுதாயத்தையே மாற்றி அமைக்க வந்தவர்கள்!

வள்ளலார் ஒரு கட்டத்தில் சைவத்திற்கு மாற்று நிலை எடுத்தார். அது முக்கியமில்லை. பசிநீக்கம் உயிரிரக்கம் இரண்டையுமே தலையாய கொள்கையாகக் கொண்டார்!

பதவியால், பணத்தால், சாதியால் உயர்ந்தவர்கள் தாழ்ந்தவர்கள் என்னும் நிலை போய், ஒத்தாரும் தாழ்ந்தாரும் உயர்ந்தாரும் ஒருமையுளராகி உலகியல் நடத்த வேண்டும் என்றார் பசியை நீக்குவதற்கு அணையாத தீயை அடுப்பில் மூட்டிய வள்ளற்பெருமான்!

மகாத்மா காந்தி "வாய்மைதான் கடவுள்" என்று உய்த்துணர்ந்து சொன்னதற்குக் காரணம் இறைவன் அவருக்கு நேரில் வராததுதான்!

நல்லவேளை ஆதீனங்களின் கனவில் நயன்தாரா வராமல் சிவபெருமான் வருவது நல்லதுதான் என்றாலும், அவர் வந்ததை உயர் நீதிமன்றம் விசாரித்து அறியுமாறு நீதிமன்றத்தின் கவனத்திற்கு வழக்கறிஞர்கள் கொண்டு செல்ல வேண்டும்!

ஆட்டத்தை நிறுத்து சொக்கா!

உன் ஆட்டத்தை அல்ல் ஆடக் கூடாதவர்களின் ஆட்டத்தை!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவத் தயார்

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கோ அநாதைக் குழந்தைகளுக்கோ வறிய மாணவர்களுக்கோ நிதி திரட்டுவதற்காக எவரேனும் நிகழ்ச்சி ஒன்றை நடத்த விரும்பினால் எமது இசைக்குழு ஊடாக உதவிகளை நல்க விரும்புகின்றோம்.

இவ்வாறு தெரிவிக்கின்றார் இலங்கையின் முன்னணி இசைக்குழுவான "சரிகம"இசைக்குழுவின் தலைவரும் முன்னணி பாடகருமாகிய K.கருணா.

***தினமகுடி இதழுக்காக அவர் வழங்கிய விசேட செவ்வி இதோ...***

*நேர்காணல்:- வை.கஜேந்திரன்*

**இசைத்துறையோடு ஈடுபாடு கொள்ளும் என்ற எண்ணம் எவ்வாறு ஏற்பட்டது?**

சிறு வயது முதலே இசைமீது எனக்கு ஆர்வம் அதிகம் அதற்கான வழிகளை இடைவிடாத தேடுதல் மூலம் என்னை வளர்த்துக் கொண்டேன்.

எனது இலக்கு நோக்கிய பயனத்தில் பல முன்னணி இசைக்குழுக்களில் பாடிய அனுபவமும். தென்னிந்திய பிரபல பின்னணி பாடகர்களோடு சேர்ந்து பாடியபோது ஏன் நானும் இளைய தலைமுறையினருக்கு இளைஞர் இசைக்குழுவென்றை அமைக்கக் கூடாது என்ற கேள்வி எழுந்தது அதற்கான விடைதான் "சரிகம".

**இசைக்குழுவிற்கு இவ்வாறனதொரு பெயர் சூட்டக் காரணம்?**

எல்லோரையும் கவரும் வண்ணம் இலகுவாக மனதில் பதிய கூடியதும் இசையோடு சம்மந்தப்பட்ட ஏழு ஸ்வரங்களில் முதல் சரிகம நான்கை பெயராக சூட்டினோம் "சரிகம" தாரக மந்திரம் மாத்தி யோசி.

**இலங்கையின் பல முன்னணி இசைக் குழுக்கள் உள்ளன உங்கள் இசைக்குழுவிற்கும் ஏனைய இசைக்குழுவிற்கும் இடையிலான போட்டி நிலை எவ்வாறு உள்ளது?**

எத்துறையானலும் போட்டி இருக்க வேண்டும் அந்தவகையில் இசைக்குக்கழுக்கிடையிலான போட்டியே எமக்கு நல்ல முறையில் நெறிப்படுத்தி உற்சாகம் அளிக்கிறது.

**உங்களது இசைவளர்ச்சிக்கு பங்களிப்பு செய்தவர்களைப்பற்றி?**

ஆரம்பத்தில் எனது குடும்பத்திற்கு ஈடுபாடு இல்லை பிறகு ஏற்றுக்கொண்டார்கள் சக நணபர்கள் இன்னும் பலர் இருந்தாலும் இங்கே குறிப்பிட்டு கூற விரும்புவது நவோதய இளைஞர் அமைப்பின் தலைவர் எஸ்.கே.கிருஷ்ணா இவர்தான் எனது ஆரம்ப காலத்தில் எனது இசைக் குழுவிற்கு வாய்ப்பளித்து தனது பல நிகழ்சிகளில் எமது இசைக்குழுவை இணைத்துக் கொண்டார் தேர்ந்தெடுத்து முன்னுரிமை வழங்கினார் வரவேற்றார் எனலாம்.

**இசைக்குழுவை வழிநடத்தும் பொறுப்பு எவ்வாறனது?**

நல்ல முறையில் பக்குவப்பட்ட அனுபவம் உடைய ஒருவரால் தான் முடியும் அந்தவகையில் பல பிரபல பின்னணிப் பாடகர்களான எஸ்.பி.பாலசுப்ரமணியம் மணோ மலேசியா வாசுதேவன் போன்ற பாடகர்களுடனும் சுசிலா, சித்திரா போன்ற பெரும் பாடகிகளுடனும் சேர்ந்து பாடிய அனுபவமும் எனது இசைக்குழுவினரோடு ஒற்றுமையோடும் இசைக் கருவிகளோடு நல்ல பரிச்சயமும் பெற்றிருப்பதால் சிறந்த முறையில் கொண்டு செல்கிறேன்.

**தற்போதைய கலைஞர்கள் தமிழ் மொழியில் பற்று இல்லாமல் இருப்பதற்கான காரணம்?**

இக்கேள்விக்கு நகைச்சுவையாகத்தான் பதில் சொல்ல வேண்டியுள்ளது ஏன் எனில் ஒரு சிலர் தமிழை அரை குறையாகப்பேசி தங்களை விளம்பரப்படுத்திக் கொள்கிறார்கள் வேடிக்கையான உலகம்.



**எவ்வாறான நிகழ்வுகளில் உங்கள் இசைநிகழ்ச்சிகள் மேடையேறுகின்றன?**

சுபகாரியங்கள் அனைத்திலும் உதாரணமாக திருமணம் பூப்புனித நீராட்டுவிழா கோயில் நிகழ்ச்சிகள் பாடசாலை வைபவங்கள் பிறந்தநாள் போன்ற நிகழ்ச்சிகள் அனைத்திலும்.

**மிகவும் முக்கியமான கேள்வி ஒன்று உங்கள் இசைக் குழுவானது வடக்கு கிழக்கில் வாழும் - குறிப்பாக இறுதி யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அவர்களின் மனச்சுமையை இறக்கி வைக்க அவர்களது வழ்வியலுக்கு உதவ ஏதேனும் இசை நிகழ்ச்சியொன்றை நடத்தலாமே?**

இப்பேட்டியை வாசிப்பவர் யாராக இருந்தாலும் சரி எங்களோடு தொடர்பு கொள்ளுங்கள்.

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கோ அநாதைக் குழந்தைகளுக்கோ வறிய மாணவர்களுக்கோ நிதி திரட்டுவதற்கு எமது இசைக்குழு மூலம் நிகழ்ச்சிகளை நடத்தித் தர தயாராக இருக்கிறோம்.

எதாவது ஒரு அமைப்பு பொறுப்பெடுத்து செய்யுமாயின் எங்களாள் முடிந்தளவு அவர்களோடு கைகோர்த்து பயணிக்க தயாராகவுள்ளோம்.

**இறுதியாக இத்துறையினை தெரிவு செய்ய துடிக்கும் இளைஞர் யுவதிகளுக்கு உங்களின் இசையுலக வாழ்வில் இருந்து பகிர்ந்து கொள்ள விரும்புவது என்ன?**

தினமகுடி வாயிலாக நான் சொல்வதெல்லாம் இசைத்துறையில் தகுதியான திறமையான இளைஞர் யுவதிகளுக்கு எமது இசைக்குழுவில் பங்கேற்க சந்தர்ப்பம் வழங்குவோம்.

இசைத்துறையில் பிரவேசிப்பவர்கள் சரியான பயிற்சியும் முறையான முயற்சியையும் மேற்கொண்டால் இத்துறையில் மட்டமல்ல எத்துறையிலும் சாதிக்கலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

தொடர்புக்கு- K. கருணா 0715557888


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலத்தோடு கொஞ்சம்

அன்பு கூடினால்
இடைவெளி குறையும்

அறிவு கூடினால்
பேச்சு குறையும்

பணம் கூடினால்
நிதானம் குறையும்

சொந்தம் கூடினால்
சோகங்கள் குறையும்

ஆசை கூடினால்
நிம்மதி குறையும்

பேச்சு கூடினால்
மரியாதை குறையும்

ஆணவம் கூடினால்
ஆதிகாரம் குறையும்

ஆடம்பரம் கூடினால்
பணம் குறையும்

கோபம் கூடினால்
ஆயுள் குறையும்

சந்தேகங்கள் கூடினால்
உறவுகள் குறையும்

யோகம் கூடினால்
நோய்கள் குறையும்

முயற்சி கூடினால்
நேரம் குறையும்

உணவு கூடினால்
ஆரோக்கியம் குறையும்

தியாகம் கூடினால்
ஏழ்மை குறையும்

காதல் கூடினால்
கனவுகள் குறையும்

ந. தமிழ்ச்செல்வன்








# சர்ச்சைகள் நிறைந்த ஐ.பி.எல். தொடரில் சம்பியனானது கொல்கத்தா!

கடந்த ஏப்ரல் நான்காம் திகதி தொடங்கிய ஐந்தாவது ஐ.பி.எல். தொடர், மே 27ஆம் திகதியுடன் முடிவடைந்தது. இத்தொடருக்கான கிண்ணத்தை பெரும் பரபரப்பான சமரில் - சென்னையின் ஹெட்ரிக் கனவுக்கு உலை வைத்து, கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி வெற்றிகொண்டது.

இதையடுத்து கொல்கத்தாவில் அந்த அணி வீரர்களுக்குப் பெரும் வரவேற்பளிக்கப்பட்டு, பரிசுகளும் வாரி வழங்கப்பட்டன.

இது ஒருபுறமிருக்க, இத்தொடர் நடைபெற்ற காலப் பகுதியில் பல்வேறு சர்ச்சைகளும் எழுந்திருந்தன.

அதில் கிண்ணத்தை வெற்றிகொண்ட கொல்கத்தா அணியின் உரிமையாளர் சாருக்கான் அடிக்கடி மாட்டிக்கொண்டார். எனினும், அவர் தமது அணி கிண்ணத்தை வென்றதையடுத்து தனது செயற்பாடுகளுக்காக பகிரங்க மன்னிப்புக் கேட்டார்.

2012-ஐ.எல்.தொடரின்போது நிகழ்ந்த சர்ச்சைக்குரிய சம்பவங்கள் குறித்த சிறு பார்வை கீழே,

* ஜெய்ப்பூரில் நடைபெற்ற கொல்கத்தா நைட் ரைடர்ஸ் - ராஜஸ்தான் ரோயல்ஸ் அணிகள் மோதிய போட்டியின் போது மைதானத்தில் சிகரெட் பிடித்தார் என்ற குற்றச்சாட்டின் கீழ் சாருக்கான் மீது வழக்குத் தொடுக்கப்பட்டது.
* வீரர்கள் ஆட்ட நிர்ணய சூதாட்டத்தில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டில் இந்திய வீரர்கள் ஐவருக்கு விளையாடத் தடை விதிக்கப்பட்டது. அத்துடன் இந்த சூதாட்டத்துடன் வெளிநாட்டைச் சேர்ந்த ஐ.பி.எல். அணி ஒன்றின் தலைவரும் ஈடுபட்டார் எனக் கூறப்பட்டதால் சலசலப்பு ஏற்பட்டது.
* போதையில் சாருக்கான், மும்பை வான்கடே மைதானத்தில் அத்துமீறி மைதானப் பாதுகாவலர்களைத் தாக்கினார் என்ற குற்றச்சாட்டில் அவர் அந்த மைதானத்துக்கு ஐந்து வருடங்கள் செல்லத் தடை விதிக்கப்பட்டது.
* செக்ஸ் புகாரில் ஆஸ்திரேலிய வீரரான பாமர்ஸ்பச் கைது செய்யப்பட்டார். எனினும், பின்னர் அவர் விடுவிக்கப்பட்டார்.
* மும்பை பார்ட்டி ஒன்றில் கலந்துகொண்டபோது போதை மருந்து பயன்படுத்தினர் என புனே வீரர்கள் இருவர் உட்படப் பலர் பொலிஸாரிடம் சிக்கினர்.

இவ்வாறு பல்வேறு சர்ச்சைகளுடன் 2012ஆம் ஆண்டுக்கான ஐ.பி.எல். தொடர் முடிவடைந்தது. உண்மையிலேயே மேற்படி சர்ச்சைகள் விளையாட்டைப் பொறுத்தவரை ஆரோக்கியமானவையாக இல்லை. இந்தச் சர்ச்சைகளெல்லாம் ஐ.பி.எல். வரலாற்றில் இந்த ஆண்டில்தான் அதிகமாக இடம்பெற்றுள்ளன.

இத்தகைய சர்ச்சைகள் சர்ச்சைகளாக ஒருபுறம் இருக்க, மறுபுறம் ஐ.பி.எல். தொடருக்கு உலகளவில் இலவச விளம்பரத்தையும் தேடிக்கொடுத்துள்ளது என்பது உண்மை.

ஒருவகையில் விளையாட்டைப் பிரபல்யப்படுத்த வகுக்கப்பட்டுள்ள ஒரு தந்திரோபாயமாகவும் இத்தகைய சர்ச்சைகளை நோக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இப்படியும் ஒரு கருத்துக் கணிப்பா?

ஆண்கள் மட்டும்தானா சுய இன்பம் இல்லையில்லை பெண்களும் அதில் ஆண்களை மிஞ்சும் வகையில் முன்னணியில் இருப்பதாக இங்கிலாந்தின் சன் இதழ் கருத்துக் கணிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. கிட்டத்தட்ட 92 சதவீத பெண்கள் சுய இன்பத்தில் ஆர்வம் காட்டுகின்றன ராம்.1953இல் எடுக்கப்பட்ட ஒரு ஆய்வில் சுய இன்பப் பழக்கம் கொண்ட பெண்களின் எண்ணிக்கை 62 சதவீதமாகவும் 1979இல் எடுக்கப்பட்ட ஆய்வில் அது 74 சதவீதமாகவும் இருந்ததாக கூறும் சன் தற்போது கிட்டத்தட்ட 90 சதவீதமான பெண்கள் சுய இன்பப் பழக்கம் கொண்டவர்களாக இருக்கின்றனர் என்று கூறுகிறது.

சுய இன்பம் நல்லதா கெட்டதா என்பதில் இன்னும் கூட நிறையப் பேருக்கு குழப்பமும் சந்தேகமும் பயமும் இருக்கத்தான் செய்கிறது. அதேசமயம், பலருக்கு இது விட முடியாத பழக்கமாக மாறிப் போய் விடுகிறது. பலர் திருமணமான பிறகும் கூட சுய இன்பப் பழக்கத்தை தொடருகின்றனர். கேட்டால், விட முடியவில்லை என்கின்றனர். ஆனால் அவர்களால் விட முடியாமல் போவதற்கு அதில் ஏற்படும் பிடிப்பு மட்டும் காரணமல்ல அவர்களின் திருமணத்திற்குப் பிந்தைய செக்ஸ் வாழ்க்கையில் திருப்தி இல்லாமல் போவதும் கூட ஒரு முக்கியக் காரணம் என்கிறார்கள் உளவியல் நிபுணர்கள்.

சரி சுய இன்பப் பழக்கம் நல்லதா, கெட்டதா இது குறித்து உளவியலாளர்கள் சொல்வதைக் கேளுங்கள்..

சுய இன்பப் பழக்கம் என்பதை கெட்டது என்றோ நல்லது என்றோ கூற முடியாது. இயற்கையான வாய்ப்புக்கு வழியில்லாத போதுதான் சுய இன்பப் பழக்கத்தை நாடுகின்றனர். அதில் அவர்களுக்கு மன திருப்தியும் சந்தோஷமும் ஏற்படுகிறது. அதேசமயம், இந்தப் பழக்கம் தொடர்கதையானால் அது மன ரீதியான பல பிரச்சினைகளுக்கு வித்திடலாம். தன்னம்பிக்கை குறையும். நம்மால் இயற்கையாக செக்ஸ் உறவு வைத்துக் கொள்ள முடியாது என்ற சந்தேகம் வந்து விடும். எப்போதும் ஒரு விதமான குற்ற உணர்ச்சியுடன் இருக்க நேரிடும் என்கிறார்கள் அவர்கள்.

ஆனால் சுய இன்பப் பழக்கத்தில் ஈடுபட்டிருப்போரோ அதை நிராகரிக்கின்றனர். நிச்சயம், குற்ற உணர்ச்சி எங்களுக்கு ஏற்படுவதில்லை. மாறாக,மன பாரம் குறைகிறது, உற்சாகத்துடன் அடுத்த வேலையைப் பார்க்க முடிகிறது என்கிறார்கள் அவர்கள்.

பெண்களைப் பொறுத்தவரை செக்ஸ் உறவின்போது பலமுறை உச்ச நிலை ஏற்படுவது இயல்பானது. ஆனால் ஆணோ, உறவை சுருக்க முடித்துக் கொள்வதில் நம்[illegible]வன். எனவே பெரும்பாலான பெண்களுக்கு உறவில் பெரு[illegible]பாலும் திருப்தி ஏற்படுவதில்லை. இதனால் அவர்களுக்கு சுய இன்பம்தான் உற்ற துணையாக இருக்கிறது என்கிறார்கள் மன நல மருத்துவர்கள்.

சுய இன்பப் பழக்கத்தால் சில உடல் ரீதியான நன்மைகளும் கூட ஏற்படுகின்றன என்கிறார்கள் டாக்டர்கள். அது[illegible]வது தொடர்ச்சியாக சுய இன்பம் அனுபவிக்கும் பழக்கம் உள்ள ஆண்களுக்கு புராஸ்டேட் கான்சர் வரும் வாய்ப்பு குறைவாக இருக்கிறதாம்.

செக்ஸ் ரீதியாக உடல் கிளர்ச்சி அடையும் பெண்களுக்கு, அதற்கான வாய்ப்பு கிடைக்காத போது பெரும் மன உளைச்சல் ஏற்படுகிறது. அதற்காக தூக்க மாத்திரை உள்ளிட்டவற்றை நாடுவதை விட சுய இன்பப் பழக்கம் அவர்களை நிம்மதிப்படுத்த உதவுகிறது.

எனவே அதை தவறு என்று கூற முடியாது என்கிறார்கள் மன நல நிபுணர்கள்.

சுய இன்பப் பழக்கம் கொண்ட பெண்கள் செக்ஸ் உறவின்போது சிறப்பாக செயல்படுவார்கள் என்று ஒரு புள்ளிவிவரத் தகவல் கூறுகிறது. இவர்களுக்கு தங்களது உறுப்புகள் குறித்த விழிப்புணர்வும், அனுபவமும் அதிகமாக இருக்கும். இதனால் இயற்கையான செக்ஸ் உறவின்போது இவர்கள் சிறப்பாக செயல்பட்டு தங்களது பார்ட்னர்களை மகிழ்விப் பார்கள் என்கிறது அந்த புள்ளிவிவரம்.

மேலும் தங்களுக்கு எத்தகைய தொடுதல், உணர்ச்சியைத் தூண்டும் என்பதையும் இவர்கள் அறிந்து வைத் திருப்பதால் அதை பார்ட்னர்களிடம் கேட்டுப் பெறுவது இவர்களுக்கு எளிதாகிறதாம்.

மருத்துவ நிபுணர்களும் சரி, உளவியலாளர்களும் சுய இன்பம் குறித்து பொதுவாக கூறும் ஒரு ஆறுதலான விடயம் சுய இன்பப் பழக்கத்தால் பால்வினை நோய்கள் வராது, விந்தணு உற்பத்தி பாதிக்காது, பெண் பிறப்புறுப்பில் பாதிப்பு ஏற்படாது என்பதே.

அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு என்பார்கள் அதை மனதில் வைத்துக் கொண்டு எதைச் செய்தாலும் சரிதான்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சாதனை படைக்கும்

# பார்வதி



அது ஒரு கணனி கல்வி நிறுவனம் அங்கு பல தரத்தில் கணனி பயிற்சி வகுப்புக்கள் நடைபெற்றுக் கொண்டு இருந்தன. அங்கு ஒரு சிறுமியும் கற்பித்துக் கொண்டிருந்தால். இதில் ஆச்சரியம் என்னவென்றால் கற்றுக் கொண்டு இருந்தது ஜி.சீ.ஈ. சாதரண தரத்தில் கல்வி பயிலும் மாணவன் ஆகும் இதனை கவனித்துக கொண்டு இருந்த எங்களை அக்கல்வி நிறுவனத்தின் முகாமையாளர் வரவேற்றார். வியப்போடு அச்சிறுமியை பற்றி விசாரித்த போது அவள் எனது அக்காவின் மகள் பார்வதி என புன்னகைத்தார். இன்னுமொரு புன்னகையோடு எம்மை நாடிவந்தார் மற்றொருவர். அவர் பார்வதியின் அம்மா அவரிடம் இச்சிறுமியின் திறமை குறித்து கேட்டோம்.

பார்வதி மூன்று வயதாக இருக்கும் போதே கணனியில் மிகுந்த ஆர்வம் உடையவள் இதனால் பிரபல தனியார் கல்வி நிறுவனத்தில் "கிட்ஸ் கம்யூட்டிங்" என்ற பாடநெறியில் இணைத்துவிட்டோம். அடுத்தடுத்து.பல கணனி தனியார் நிறுவனங்களில் கல்வி கற்க தொடங்கினார். இறுதியாக ஆறு வயதில் இலங்கையில் மிகவும் குறைந்த வயதில் "கிராப்பிக் டிசைனிங்" டிப்ளோமா பட்டம் பெற்று சாதனை படைத்துள்ளார் என்றார்.

பார்வதியின் சாதனைகளை பட்டியலை பார்த்தபோது நாம் அதிர்ச்சியின் ஆழ்ந்தோம்.

இதோ உங்களுக்காக அவரது விவரம்.

கணனிக்கல்வி(M.S.office-Net-photoshop)-ஓவியம்-கணனி வரைதற்கலை-7வயதில்- பரதம் -சினிமா நடனம்-(இசை)-வாய்பாட்டு  நீச்சல்-5m free style (ஆங்கிலத்தில்பேச்சுபோட்டி-கவிதை-கட்டுரை-கதைஎழுதும் திறன்) தமிழ்-ஆங்கிலம்-சிங்களம்-பிரேஞ்ஸ் போன்ற மொழிகளில் வயதுக்கு ஏற்ப பேசும் திறன் கொண்டவர். நடிப்பு-(குரல்வளம்-டப்பிங்) மொடலிங் (ஆடைவிளம்பரம்) என பல துறைகளிலும் சாதிக்கும் பார்வதி பட்டங்கள் வெற்றிக்கேடயங்கள் பாராட்டு பத்திரங்கள் சான்றிதழ்கள் மடல்கள் என ஒவ்வொரு துறையிலும் பிரகாசிக்கிறாள்.

சிறப்பம்சமாக Adope illustrater பாடநெறியினை பூர்த்தி செய்து டிப்ளோமா பட்டமும் பெற்றுள்ளார். தற்போது இசைத்துறையிலும் தனது சித்தியின் நிறுவனத்தில் சிறுவர்களுக்கான "கிட்ஸ் கம்யூட்டிங்" பகுதி நேர ஆசிரியராகவும் flash animation தொடரவும் உள்ளார் இத்துறையினை கற்கவிருக்கும் சிறுமிகள் பத்து பேரில் பார்வதியும் ஒருவர் இத்தனைக்கும் பார்வதி தரம் 3இல் கல்வி கற்கும் மாணவி என்பது குறிப்பிடத்தக்கது.




## தேவை ஒரு

# தமிழ்த் தேசிய புரட்சி

தமிழகத்திலிருந்து கி.வெங்கட்

உலகமயப் பொருளியல் உலகமக்களைத் தாக்கி வருகிறது. உழைப்பு, இயற்கை, பணம் ஆகியவைமட்டுமின்றி, புன்னகை, அழுகை, பெண்ணின் நளினம் ஆணின் உடற்கட்டு..... அனைத்தும் சந்தை சரக்காகி வருகின்றன.

உலகச் சந்தையையும், உள்நாட்டுச் சந்தையையும் தடை ஏதுமின்றி தாராமயமாக்குவதன் வழி, வர்த்தகம் மற்றும் நிதிமூலதனம் ஆகியவை நாட்டு எல்லைகளைக் கடந்து தங்குதடையற்றுப் பரவுவதற்கான ஏற்பாடுதான் உலகமயம் (Globalization) எனப்படும், இதற்கான பொருளியல் கொள்கையைப் புதிய தாராளமயம் (Neoli beralism) என்றும் கூறுவர்.



இரண்டாம் உலகப் போருக்குப் பின் காலனி நாடுகள் விடுதலை அடைவது தீவிரம் பெற்றது. சோசலிச முகாம் ஒன்றும் அமைந்தது "கம்யூனிச அபாயம்" பரவாமல் தடுக்க ஏகாதிபத்திய நாட்டு அரசுகள் கல்வி, மருத்துவம், சமூகப் பாதுகாப்பு போன்றத் துறைகளில் மக்கள் நல நடவடிக் கைகளை மேற்கொள்ள வேண்டியதாயிற்று.

ஆயினும் சில பத்தாண்டுகளிலேயே புதிதாக விடுதலை பெற்ற நாட்டு ஆளும் வர்க்கங்களிடையே ஏகாதிபத்தியத் தோடு கைகோர்க்கும் போக்கு வலுப்படத் தொடங்கியது. 1980-களின் இறுதியில் கிழக்கு ஐரோப்பிய நாடுகளும், சோவியத் ஒன்றியமும் சோசலிசப் பாதையிலிருந்து வீழ்ந்த பிறகு இப்போக்குத் தீவிரம் பெற்றது.

இக்காலக் கட்டத்தில் ஏற்பட்டத் தகவல் தொழில் நுட்பப் புரட்சி - நிதி மூலதனப் பரவலுக்குப் பெருந்துணை புரிந்தது.

தகவல் தொழில் நுட்பம் உள்ளிட்ட புதிய உயர் தொழில் நுட்பங்கள் அறிவுசார் முற்றுரிமை முதலாளிகளையும் உருவாக்கியது. மூலதனத்தை வைத்து உலகைச் சுரண்டுவது போல "அறிவைக்" கொண்டு சுரண்டுவது என்ற வாய்ப்பு பெருமளவில் திறந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



விடப்பட்டது. குறுகிய காலத்திலேயே உலகின் முதல் இட முதலாளியாக மைக்ரோசாப்ட் நிறுவனத்தின் பில் கேட்ஸ் வர முடிந்தது.

மூலதனத்துக்கு நிகராக அறிவு என்பதும் சுரண்டல் ஆயுதமாக வளர்ந்து புதிய போக்காகும். உலக வர்த்தக அமைப்பு காப்புரிமை ஒப்பந்தம், அறிவுசார் சொத்துரிமை ஆகியவை வலுப்பெற வழிகோலியது.



கண்டுபிடிப்புக்குக் காப்புரிமை பெறுவது, அதன் மூலம் முதலாளிகள் உருவாகுவது ஏற்பட்டது. இன்று இப்போக்கு தனித்தன்மை பெற்ற ஒன்றாக வளர்ந்திருக்கிறது.

மாறாக வளர்ந்து வரும் "மூன்றாம் உலக" நாடுகளின் ஆட்சியாளர்கள் ஒப்புதலோடு அந்நாடுகள் உலகமயக் காலனிகளாக மாறி வருகின்றன. இவ்வகை முதலாளிகள் உலகமயச் சுரண்டலில் ஏகாதிபத்தியத்தின் கூட்டாளிகளாக மாறிவிட்டார்கள். ஒரு சில நாடுகளில் தரகு முதலாளிகளாகவும் வேறுபல நாடுகளில் இளைய பங்காளிகளாகவும் இவ்வகை முதலாளிகள் இருக்கிறார்கள்.

உலகம் முழுவதும் இவ்வாறான ஆதிக்கக் கூட்டணிக்கும் மக்களுக்குமான முரண்பாடே முதன்மை பெற்றுள்ளது. பெரும்பாலான நாடுகளில் இது தேசிய முரண்பாடுகளின் ஊடாக வெளியிடப்படுகிறது.

புதிய தாராளமயம் புதிய தொழில்களை உருவாக்கும் என்று கூறுவது பெரும்பாலும் உண்மை இல்லை. மாறாக உள்ளூர் தொழில்களை அழிப்பதே பொதுப்போக்காக உள்ளது.தாராள இறக்குமதி அந்தந்த தேசிய இனத்தொழில் முனைவோரை விரட்டியடிக்கிறது.



பறக்கும் பணம் என்பது உலகமயத்தில் விளைந்த பெரும் சிக்கலில் ஒன்றாகும். நிதி மூலதனத்தின் பேயாட்சி இதன் மூலமே முதன்மையாகச் செயல்படுகிறது.

வணிகத்தில் பங்குச்சந்தை நிதி மூலதனம், உலகின் ஒரு பகுதியிலிருந்து இன்னொரு பகுதிக்கு பறப்பதற்கு தகவல் தொழில் நுட்பப் புரட்சி துணை செய்கிறது.

இன்டர்நெட் மூலம் பணம் நாடுவிட்டு நாடு கண்ணிமைக்கும் நேரத்தில் பறந்து விடுகிறது. ஆயினும் உலகம் முழுவதும் உலகமயத்திற்கு எதிரான கிளர்ச்சிகளுக்கு அடித்தளமாக தேசிய இன உணர்ச்சிகளே அமைந்துள்ளன.

லத்தீன் அமெரிக்க நாடுகள் ஒன்றன்பின் ஒன்றாக உலகமயத்திற்கு எதிராக கிளர்ந்தெழுவதற்கு தேசிய இன உணர்ச்சியே அடித்தளமாக அமைந்திருக்கிறது.

இதற்கு வெனிசுவேலா, பொலிவியா, நிகரகுவா போன்ற நாடுகள் சான்று பகர்கின்றன. ஸ்பானிய மொழி உணர்ச்சி, ஆப்ரோ-அமெரிக்க இன உணர்ச்சி ஆகியவற்றின் ஏகாதிபத்திய எதிர்ப்பு ஆற்றலை பிடல்காஸ்ட்ரோ (Fidel Castro) வெளிக் கொணர்ந்திருப்பதும், மாயன் பழங்குடித் தொன்மங்கள் சபடிஸ்டாக்களின் வல்லாதிக்க எதிர்ப்புக்கு அடித்தளமிட்டிருப்பது கவனம் கொள்ளத்தக்கது.

இதன் காரணமாக உலகமயத்தால் நசுக்கப்படும், உழவர்கள், தொழிலாளர்கள், ஒடுக்குண்ட சாதியினர், ஒதுக்கப்படும் சிறுபான்மையினர், சிறு,நடுத்தர தொழில் முனைவோர் முதலிய புரட்சிகர சக்திகளை உலகமய எதிர்ப்பில் ஒன்றிணைக்கிற மகத்தான புரட்சிகர ஆற்றல் கட்டியெழுப்பவேண்டியது அவசியமாகின்றது. அதற்கான சக்தி இப்போது தமிழ் தேசியத்திடமே உள்ளது என ஆய்வாளர்கள் கூறுகின்றனர்..

சூழல் பாதுகாப்பு, மரபான தொழில் நுட்பப் பாதுகாப்பு, மனித உரிமைப் பாதுகாப்பு ஆகிய தளங்களில் உலகமயத்திற்கு எதிராகக் களம் அமைப்போர் ஒன்றிணைய வேண்டிய தளமும் தமிழ்த் தேசியம் தான் என்றும்.

தமிழ்த் தேசியப் புரட்சிதான் உலகமயத்தை முறியடிக்கும் ஆற்றல் கொண்டது கூறப்படுகிறது எனவே தமிழ் தேசிய புரட்சி ஏற்படுவது எவ்வாறானது என்பதே இப்போது கேள்வியாகவுள்ளது.

இது குறித்து மேலதிகமாக எழுதவிரும்புவோர் எழுதலாமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரெட்பான
மக்கள்
சந்திப்பில்...



சபைக்குரிய தேரர் உரையாற்றும் போது



உதவித் தொகை வழங்கும்போது

# நவோதய அமைப்புகளின் நிகழ்வுகள்



ரி.எம்.எஸ். விருது பெறும் எஸ்.கே. கிருஷ்ணா



ஜிந்துப்பிட்டியில் விகாரை நிர்மாணப்பணிக்காக எஸ்.கே.கிருஷ்ணா நன்கொடை வழங்கியபோது



ரெட்பான மக்கள் சந்திப்பின்போது




ரெட்பான மக்கள் சந்திப்பில் உதவி தொகை வழங்கும் போது





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கொச்சிக்கடை புனித அந்தோனியார் ஆலயம்

நம் இலங்கைத் திருநாட்டில் எத்தனையோ திருத்தலங்கள் பிரசித்திபெற்று விளங்குகின்றன. அவற்றுக்கெல்லாம் சிகரம் வைத்தாற்போல் திகழ்வது கொழும்பு கொச்சிக்கடை புனித அநதோனியார் ஆலயம்.

பாதுவா நகரில் பிறந்த புனித அந்தோனியார் 1231 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 13 ஆந்திகதி உயிர்நீத்தார். அந்நாளே அவரது திருவிழா தினமாக உலகமெங்கும் கொண்டாடப்பட்டு வருகின்றது.

இலங்கை ஒல்லாந்தரால் ஆளப்பட்டது. அக்காலத்தில் கத்தோலிக்க மதம் தடை செய்யப்பட்டிருந்தது. கத்தோலிக்கத் துறுவியர்களின் சிரசைக் கண்ட இடத்தில் தறிக்குமாறு அந்நாளைய அரசு போர் வீரர்களுக்கு உத்தரவிட்டிருந்தது. கத்தோலிக்கத் துறவிகள் வெளிப்படையாகத் திருப்பணியாற்ற முடியாத அவல நிலை இருந்தது.

அக்காலத்தில் தான் அருட்திரு. ஜோசப்வாஸ் அடிகளாரும் அருட்திரு யாக்கோமே கொன்சாலவெஸ் அடிகளாரும் தம்முயிரை பணயம் வைத்துத் திருப்பணியாற்றி வந்தனர். அச்சமயம் கொழும்பு நகருக்கு தனி ஒரு குரவர் எவரும் இருக்கவில்லை. இந்நிலையில் அருட்திரு. அன்டனியோ அடிகளார் வர்த்தகராக வேடம் பூண்டு இரகசியமாகத் திருப்பணி ஆற்றி வந்தார். ஒல்லாந்தர் இவரைத் தேடி வலை வீசினர். அடிகளார் ஒருவாறு ஓடி ஒளிந்து கொச்சிக்கடைப் பகுதிக்கு வந்து சேர்ந்தார். அக்காலத்தில் கொச்சிக்கடை ஒரு சிறிய மீனவர் கிராமமாக இருந்தது. அக்கிராமத்தவருக்கும் அடிகளாருக்கும் ஏற்பட்ட ஈடுபாடு ஒல்லாந்தர் சிப்பாய்களைச் சற்று பணிய வைத்தது.

ஆண்டாண்டு காலமாக அக்கிராமவாசிகள் கடலரிப்பினால் தங்கள் வீடுகளையும் நிலங்களையும் இழந்து அல்லலுற்றார்கள்.

அடிகளார் திருச்சிலுவை ஒன்றைக் கையில் ஏந்தி கடற்கரையை அடைந்தார். இறைவனிடம் மனமுருக பிரார்த்தித்தார். இறைவனும் மனமிரங்கினார். கடலரிப்பு அகன்றது. அவ்விடத்தில் அற்புதமாக மணல் மேடு உருவானது. இறைவனின் மகிமையை மக்கள் போற்றினர். அன்டனியோ அடிகளார் புனித அந்தோனியாரின் அற்புதங்களை மக்களுக்கு எடுத்து விளக்கினார். புனிதருக்காக ஒரு சிறு குடிசையில் ஆலயம் கொச்சிக்கடையில் உருவாயிற்று.

அன்டனியோ அடிகளார் திருச்சிலுவையை நாட்டிய இடம் தான் இன்று நாம் காணும் புனித அந்தோனியாரின் சிறிய பீடம். 1806 ஆம் ஆண்டு ஆலயம் விரிவாக்கப்பட்டது. 1822 ஆம் ஆண்டு கோவாவிலிருந்து கொண்டுவரப்பட்டதுதான் அற்புதம் வாய்ந்த புனிதரின் அந்தச்சிறிய சுருபம். நன்னாக்கு அழியாத புனித அந்தோனியார் என்று நாம் அறிகின்றோம். அந்நாக்கின் ஒரு சிறிய பகுதி புனித அந்தோனியார் ஆலயத்தில் வைக்கப்பட்டிருக்கின்றது. அதனால்தான் போலும் ஆலயத்தில் தினம் ஒன்றாக அற்புதங்கள் நடந்து கொண்டிருக்கின்றன.

இவ்வாலயத்தை நாடி வரும் கத்தோலிக்க பக்தர்களை விட பிற சமய சகோதரர்களின் எண்ணிக்கையே அதிகம் எனலாம். போர்ச்சூழல் மறைந்து நாட்டில் அமைதி ஏற்பட்டுக் கொண்டிருக்கும் இவ்வேளை மக்கள் அனைவரும் ஒற்றுமையா ஒரு குடையின் கீழ் வாழும் வரத்தை இறைவனிடமிருந்து பெற்றுத்தரும்படி புனித அந்தோனியாரிடம் நாமும் பிரார்த்திப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org